முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 13—7—56 | வெள்ளி | ஒலி 14



* *

* * *

தி. மு. கழகம், தேர்தலில் ஈடு படுவதாக திருச்சி மாநில மாநாட்டில் தீர்மானித்ததும்—மூடிக் கிடந்த காமராசரின் திருவாய் திறந்து கொண்டது. "தேர்தலில் நிற்பதற்கு தி. மு. க. விடம் பலமில்லை. அதனுல்தான் பெரியார் கெட்டிக்காரத்தனமாக தேர்தல் விவகாரங்களிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். "அவர் போக்கு எனக்கு நிரம்பப் பிடிக்கிறது. அவர் வாழ்க! தி. மு. கழகம் ஒழிக! திராவிடநாடு கேட்பது முட்டாள்தனம், யூனியனிலிருந்து பிரிவது பைத்தியக்காரத்தனம்!" என்பன போன்ற கருத்துரைகளை அவர் அனுதினமும் அள்ளிக் கொட்டி வருகிறார்.

நம்மிடத்திலே பலமில்லையாம்—நாடாளும் அமைச்சர் கணக்குப் போட்டுக் கூறுகிறார் அனுதாப உணர்ச்சியோடு!

முதலாளிகளின் துணையையும், முன்னோரின் தியாகங்களையும் பலமாகக் கொண்டு தன்னம்பிக்கையற்றுத் தடுமாறும் காமராசர் நம்மைப் பலமற்றவர்கள் என மொழிவது, மூடவன்—முறுக்கேறிய உடற் கட்டுடைய வாலிபனைப் பழித்தது போலத்தானிருக்கிறது!

நமது பெரியாரோ நம்மிடம் பணமில்லையென்கிறார் தேர்தலில் நிற்பதற்கு! விட்டுவந்த ஐந்து லட்சத்தை கேட்கவா போகிறோம்—அதனுல் அந்த அச்சம் தேவையில்லை அவருக்கு!

பலமில்லை—பணமில்லை—ஒத்துக் கொள்கிறோம்; வாதத்திற்காக! அதே சமயம் இலட்சியத்தை நிறைவேற்றிட எடுத்திடும் முயற்சிகளில் ஒன்றும் தேர்தலில் ஈடுபடுவதற்கு எம் உள்ளத்தில் எள்ளத்தனையும் பயமில்லை யென்பதை அறிவித்து விட்டோம்—

அதைத்தான் இந்தச் சித்திரம் விளக்குகிறது!

* * *

* *

இலக்கியத்தில் நாம்

ஒரு நாட்டின் காவலன் முறை தவறினால் வழக்கமாகப் பெய்கின்ற பருவ மழைகூட பெய்யாமல் பொய்த்துவிடும் என்று கூறி-கொடுங்கோன்மையாட்சியின் விளைவுதனை 'முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்' என்ற வரிகளால் குறிப்பிடுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

மன்னன் நெறி பிரண்டால் பருவமழை பொய்த்துப் போவது என்பது கொடுங்கோன்மையின் கடுமைக்கு உயர்வு நவிர்ச்சியாக கொள்ளப்படினும்,

கொற்றம் பிழைத்தால் — குற்றம் குற்றமே என்றிடும் துணைவு மிக்க தமிழ் நெய்யும் புலவர் பெருமக்கள், பூ மொய்க்கும் வண்டு போல காவலனை சூழ்ந்திருப்பர். தம் கடமை அதுவெனறெண்ணிடுவர்.

எதற்கெடுத்தாலும் தலையசைத்துக் கைதூக்கும் பதுமைகளாக இல்லாமல்; தவறு கண்டவிடத்து சுட்டிக்காட்டி அவர்தம் கடமையைச் செய்தனர்.

புலவர் பெருமக்களேயன்றி, ஊர் ஆள்வோன் கொற்றத்தால் பாதிக்கப்பட்ட சாதாரணப் பிரஜையாயினும், அத்தாணி மண்டபம் புகுந்து. அரசு கட்டிலுக்கு முன்னால் 'தேரா மன்னா! தெளிவு பெறாதா ஓ ராஜனே!' என்று விளித்து, முறையிட்டுக் கொள்கிற அளவுக்கு ஒரு சாதாரண குடிமகனுக்கும் உரிமை இருந்ததாக அறிகிறோம்.

குடிமகனுக்கு வழங்கப் பட்டிருந்த அந்த உரிமை மட்டுமல்ல, 'யானோ அரசன். யானே கள்வன் தென்புலக் காவல் என் முதல் பிழைத்தத; கெடுக என் ஆயுள்' என்று தன் குற்றத்திற்கு தானே தண்டனை விதித்துககொள்ளும் நேர்மை தவறா பாண்டிய நெடுஞ்செழியர்களையும் நமக்கு தமிழ் இலக்கியங்கள் அறிமுகப் படுத்துகின்றன.

குடிமகனால் குறை விளக்கப்படுவதும், கொற்றவன் குறையுணர்ந்து திருந்துவதும், அக்கால ஜனநாயகம். முடிதரித்த வேந்தர்கள் ஆண்டகாலத்து அரசியல் நாகரீகம். ஆனால்...!

குறை விளக்கப்படுவதும், விளக்கியவன் அடக்கப்படுவதும், அடைக்கப்படுவதும் இக்கால ஜனநாயகமாக!—அதாவது மகுடம் புனையா 'ராஜாக்கள்' ஆட்சி நடத்துகின்ற 'அசல்' ஜனநாயக அரசியலின் நாகரீகமாக இருந்து வருவதை அறிகிறோம்; அனுபவித்தும் வருகின்றோம்.

★

கொற்றம் பிழைத்தால் குறை கண்டு சொல்ல. நற்றமிழ்ப்புலவர்கள் இருந்ததைப் போலவே, குடும்பங்களிலே ஏற்படுகிற கொந்தளிப்பு, தாம்பத்ய உறவிலே வருகின்ற தகராறு, அகத்துறை ஈடுபாடு கொண்ட தலைவன் தலைவியரிடத்தே ஏற்படுகிற அமளி, ஆகியவற்றை தீர்த்து வைக்கவும், தலைவன் செய்கின்ற தவறுகளையும், நெறி கெட்ட செயல்களையும் எடுத்துக் கூறி திருத்துகின்ற உரிமையை, அரசவைப் புலவர்களைப் போலவே, நல்லறிவும், நயம்பாடும் புலமையும் பெற்ற 'தோழியர்' தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே நடுநிலை வகித்து, காதல் வாழ்வு ஒளி பெறச் செய்திருககின்றனர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறி கண்டு, நினைவு கொண்டு, இணை பிரியா அன்றிலென அந்த ஆணழகனும் அழகு மயிலும் இல்லறம் நடத்தினர். நாட்கள் நகர்ந்தன.

ஏனோ அத்தலைவனுக்கு திடீரென்று ஒரு நாள் நப்பாசையொன்று வந்து விட்டது!

கிளைக்குக்கிளை தாவும் மந்தி குணம் எப்படியோ அந்த நேர்மையாளன் நெஞ்சிலே வந்து புகுந்து விட்டது.

அவன் தவறிழைக்க நினைத்த போதெல்லாம், தடம் புரண்டு தாம்பத்திய உறவுக்கு மாசு தூவ நினைத்தபோதெல்லாம், அவன மனச்சாட்சி அவனை எச்சரிக்காமல் இல்லை; 'வண்டு மனம் கொண்டவனே; வழுக்கி விழாதே! 'கற்பு' பெண்களுக்கு மட்டும்தான் சொந்தமென்றெண்ணி விட்டாயா? அது ஒரு பொதுப் பண்பு; ஆண் பெண் இருவருமே ஏந்தி நிற்க வேண்டிய தீச்சுடர்!'' இப்படி அவன் உள்ளம் தாவ நினைத்த குரங்கு மனத்திற்கு சாட்டை கொடுத்தது.

நன்மையும் தீமையும் போராடும்போது, தீய சக்திதான் பெரும்பாலும் வெற்றியடையும் என்பதுபோல; தலைவனின் மனப் போருக்குப் பிறகும். அவன் கொண்ட தீய நினைவுதான் வெற்றி பெற்றது.

''ஒருவனுக்கு ஒருத்தி யென்றால், வாய்விட்டு உரக்கச் சிரித்திடும் பரத்தை ஒருத்தியின் வலையிலே விழுந்து விட்டான், தலைவன்! மதர்த்திடும் கெண்டையும், மருட்டிடும் சிந்தையும் கொண்ட அசசித்த முருக்கியின்; கொவ்வைக்கனி இதழ் நித்தமும் விற்பவளின், முத்த விருந்திலே மயங்கினான்' மோக போதையிலே காலத்தை மறந்தான்; அந்தோ அத் தமிழ் மகன் கடமையையும் மறந்தே போனான்!

தன்னைப் பிரிந்து சென்ற தலைவன், எண்ணையிருந்தால் மட்டுமே ஒளி வீசும் விளக்கொளிபோன்ற வேசையர் நட்பிலே தன்னை மறந்தான், தன் தேயாத பேரழகைத் தெவிட்டாத கனி மொழியை மறந்தான். அத்தி மலரிலே மணமும், அருங் காக்கையிடம் வெண்ணிறமும் காணச் சென்றான், கானல் நீரிலே தாகசாந்தி பெற குளிர் புனலை விட்டுப் போயிருக்கிறான். என்ற கொடுமையை நினைத்தாள், உள்ளுக்குள் குமுறுகின்ற எரிமலைபோல் குமுறி நின்றாள் தலைவி!

எத்தனையோ இரவுகள் தனிமைத் தீயால் அத் தமிழகத்துக் கிளி வாட்டி வதைககப்பட்டாள்.

★

சொற்கொண்ட பாவின் சிலை வடிவு போல் இருந்த அவள், சோக காவியத்தின் கதாநாயகி போல ஆகி விட்டாள்.

விற் கொண்ட அவள் நிலாத் துண்டு நெற்றியிலே, வேதனைப் பனி மூட்டங்கள் சூழ்ந்து கொண்டன,

நெற் கொண்ட பொன்னிறம் போல் காணப்பட்ட அவள் மேனி வெளுத்துப் போய், மஞ்சள் கலந்த பசலைநிறம் பெற்று விட்டது

கற்கண்டு அவள் சுந்தர இதழ் சிந்தும் சொற்செண்டு, என்று பாராட்டப் பட்ட நிலை மாறி, எடுத்து வீசப்பட்ட பூச்செண்டு போல் புறக்கணிக்கப்பட்ட கொடுமையை எண்ணி எண்ணி கண்ணீர் வடித்தாள்.

கன்றும் குடிக்காமல், கலயத்திலும் விழாமல, நல்லாவின் பால் நாசமாவது போல, அவள் கட்டிளமை தேய்ந்துகொண்டிருந்தது.

வெட்டாத வைரக்கல்; ஒளி எங்கே இருக்கும்?

மீட்டாத வீணை, மீளா சுகம் தரும் மோகனம் எப்படி பிறக்கும்!

தலைவியின் துயர் கண்டாள்; தவித்தாள்; பாவியவள்; பெண்மையின் மென்மையை அறியாமல் போனானே!

இடையாட்டி, கடைகாட்டி இன்பரச பானத்தால்; உயிர் பறித்து—உடமை பறித்து; கை வற்றிய உடன்; ''போய்வா காதலா! பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை! ஏன் தயக்கம்; என் இடைக்கால ராஜாவே! இன்னொரு முறையும் வரலாம்; இன்பம் பெறலாம்; ஆனால் பொன்னோடு வரமட்டும் மறந்து விடாதே!'' என்று கை கழுவி; கழுத்தை அறுக்காமல் அறுத்து 'இன்பக் கடை' விரித்து இளமைக்கு வலை விரித்து, வாழ்க்கை நடத்தும் விலை மாதர்களை சதமென்றெண்ணி, அழகுக்கு இலக்கணம் கூறும் என் தமிழ்க் கிளியை மறந்தானே; மதிபிழந்தானே!'' என்றெல்லாம் எண்ணி எண்ணிக் கலங்கினாள்.

★

பழகப் பழகப் பாலும் புளித்தது; பாத்தை நடத்திய 'வீனஸ் விளையாட்டு' அலுத்தது! 'கனியிருக்க — காஞ்சிரங்காயைத் தேடிவந்தேனே!' என்று பாடாமல் பாடினான். பாவி நான் நெறி கெட்டேன்; முறைகெட்டேன்; என் முழு நிலவை மறந்தேன் என்றெல்லாம் கலங்கினான்; அச்சம் கொட்ட, அவமானம் வாட்ட நேராகத் தலைவியிடம் செல்ல முகமில்லாமல் தோழியிடம் வந்தான். 'நடந்தது நடந்துவிட்டது. என்னை மன்னித்துவிடு; தலைவியையும் மன்னிககச் சொல்!' என்று குழைந்தான். நெருக்கடியான நேரங்களில் பூனையும் புலியாவது போல, தோழி, தமிழச்சிக்கே உரித்தான ஆத்திரம் அனலாக விழிகளிலே கொப்பளிக்க சொல்லம்புகளைத் தொடுத்தாள். அவனைத் திணறடித்தாள்.

மருத நிலத்தைச் சேர்ந்த அவன் நாட்டு நஞ்சை நிலத்தின் வளத்தைக் கூறுபவள் போல எடுததுரைத்து, அதோடு ஒரு எருமை மாட்டின் செயலையும் இணைத்து, உவமை வாயிலாக தலைவனின் தகாச் செயலுக்கு சாட்டையடி தந்தாள்.

உன் நாட்டில் தனக்கே இயல்பான சேற்று நிலத்தில் நின்று நின்று வெறுத்து விட்ட எருமை, ஊரெல்லாம் உறங்கும் நடுநிசியிலே, கட்டறுத்துக் கொண்டு, கூர்மையான முள் வேலிகளைத் தன் கொம்பால் விலக்கிக் கொண்டு கெண்டை துள்ளும் நஞ்சையிலே மீன்கள் அஞ்சி ஓடும்படி புகுந்து அழகிய வெள்ளைக் கொடிகளை மயக்கி விட்டு தாமரை மலரைத்தின்னும் என்று கூறி—நீயும் தலைவியோடு வாழ்கின்ற முறையான வாழ்வை விட்டு, நாணத்தை மறந்து, நட்ட நடு நிசியில், கட்டறுத்துக் கொண்டு தாமரை மலரைத் தின்னப்போகும் எருமை போல, பரத்தையோடு கூடி வாழும் முறை கெட்ட வாழ்வு நடத்தினாய், என்று குறிப்பிட்டு.

கட்டறுத்துக் கொண்டு செல்லும் எருமையை, கடமை மறந்து சென்ற தலைவனுக்கு உவமையாக்கினாள்!

தலைவனோ உயிர் வற்றிய சிலை போல செயலற்று நின்றான்.

கொற்றவனின் குற்றம் காட்டும் நற்றமிழ்ப் புலவரின் நாவன்மை பெற்று, தலைவனின், தவறை உவமை நயத்தோடு சுட்டிக் காட்டி நின்ற அத்தோழியின் புலமை காட்டும் 'அகத்' துறை பொன் வரிகள்; இதோ,

''சேற்று நிலை முனை இய செங்
கண்காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை
பரிந்து
கூர் முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித்
தாமரை.
வண்டு ஊது பனிமலர் ஆரும்
ஊர!

(வி)

சென்னை 13-7-56 வெள்ளி

திலகரும், தீயோரும்!

சுதந்திரம் என்ற வாசகம் வெளிவந்த இடத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் அதிர்ந்த நேரம், 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்று கர்ஜனை புரிந்த கர்ம வீரர் லோகமான்ய திலகரின் நூறுவது பிறந்த நாள் அண்மையில் வருகிறது.

அவருக்கென நாடெங்கும் விழாக்கள் கொண்டாடுவதற்கு மட்டுமின்றி பிரத்தியேக தபால் தலைகள் வெளியிடுவதற்கும் ஏற்பாடு செய்து வருகிறது, இந்திய அரசாங்கம்!

தீயென எழுந்து, வெள்ளையரைப் 'போ' என முழக்கமிட்டவர்— அவருக்கு நினைவு நாள் நடத்தி, விடுதலைக் கனிவு கொண்ட அவரது கொள்கைகளுக்கும், உறுதிவாய்ந்த உள்ளத்திற்கும் மதிப்பும் மரியாதையும் தரப்போகின்றனர்.

திலகரின் உருவத்துக்கு திலகமிடும் வைபவம்! — ஆனால் அதற்கு சில வாரங்கள் முன்னதாக அவரது கருத்துக்கள்மீது கல்லையும், மண்ணையும் வாரியிறைக்கும் கண்மூடிச் செயல் நடைபெற்றிருக்கிறது!

பஞ்சாப் மொழிக்காரர்களுக்கென தனி மாநிலம் கூடாதென்ற கொள்கையுடைய 'மகா பஞ்சாப் சமிதி' இயக்கத்தவர்கள் நடத்திய ஊர்வலத்தின்போது, அங்குள்ள போலீஸ்காரர்கள் மிருகத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜூன் 17-ல் அங்கே நடந்த அக்ரமச் செயல்கள் கேட்போரின் மனித உள்ளம் துணுக்குறும் வகையிலே கொடுமையும், காட்டுமிராண்டித் தனமும் நிறைந்ததாய்க் காணப்படுகிறது.

பொதுமக்கள் தப்பித்து ஓடுவதற்கு சிறு சந்து பொந்துகள்கூட இல்லாத மூலையிலே பலத்த தடியடிப் பிரயோகம் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது.

போலீஸ் உடை தரித்தவர்கள் மட்டுமல்ல; சாதாரண உடை அணிந்தவர்கள்கூட கையிலே தடிகொண்டு குழுமியிருந்த மக்களின் முதுகுத் தோலை பதம் பார்த்திருக்கின்றனர்.

வேடிக்கை பார்க்க வந்த சிறுர்கள் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டு, தடியடிகளைப் பரிசாகப் பெற்றுச் செல்லும்படி வற்புறுத்தப் பட்டிருக்கின்றனர்.

இந்தக் கொடுமைக்கெல்லாம் கொடுமுடி வைப்பது போன்ற செய்தி என்னவெனில்: மாதர்களெல்லாம் மானபங்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்; போலீசாரில் சிலர் பரமசிவன் வடிவமெடுத்து தாருகா வனத்திலே அவன் புரிந்த லீலைகளைச் செய்ய முனைந்திருக்கின்றனர்!

வெள்ளையனை வெளியேற்ற ஜாலின்வாலாபாக்கிலே சாக்காட்டை அணைத்தார்களே, அன்று, ஆயிரமாயிரவர்கள் - அந்தத் தியாக பூமியிலே தான் ஹோசியார்பூர் என்னும் ஊரில் இட்லரும், முசோலினியும்கூட வெட்கித் தலைகுனிகிற அளவுக்கு இரக்கமற்ற அடக்குமுறை தர்பார் நடைபெற்றிருக்கிறது.

தப்பிப்பதற்கும் இடமில்லாத மூலை முடுக்கு ஒன்றில் தடியடிப் பிரயோகம் செய்தது —

குழந்தைகளையும், சிறுவர்களையும் சித்ரவதை புரிந்தது—

மாதர்களை மானபங்கப் படுத்தியது; கற்பழிக்கவும் முயன்றது —

போலீசார்கள் மட்டுமின்றி காலிகளும், கூலிகளும் தடியடிப் பிரயோகத்தில் ஈடுபடுவதை அனுமதித்தது—

இதுபோன்ற பல குற்றச்சாட்டுகளுக்கு இந்த அரசாங்கம் பதில் சொல்லவேண்டிய கட்டத்துக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

ஹோசியார்பூர் மக்களெல்லாம் கொதித்துப்போயிருக்கின்றனர்.

கடந்த மூன்று வாரங்களாக அந்த நகரிலே எந்த ஒரு சிறு கடையும் திறக்கப்படாத அளவுக்கு பரிபூரண ஹர்த்தாலையும் வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.

அவர்கள் கோரிக்கை யெல்லாம் சம்பந்தப்பட்ட உத்யோகஸ்தர்களை உடனடியாக பதவியிலிருந்து விலக்க வேண்டுமென்பதல்ல — நல்ல நடுநிலையாளர்களைக் கொண்டு இந்த அக்ரமத்தைக் குறித்து விசாரணை செய்யவேண்டுமென்றுதான் அவர்கள் இந்திய அரசை வேண்டினார்கள்.

—இந்தச் சாதாரண; நியாயம் பொதிந்த; பொது மக்களின் விருப்பத்துக்கு மாநில அரசாங்கமும் சரி; மத்திய அரசாங்கமும் சரி பல நாட்கள் இடங்கொடுக்கவில்லை.

'விசாரணைக் குழு அமைத்தால் அது சரிவர இயங்க முடியாது; பரபரப்பு எல்லாம் ஓயட்டும்' என்று தீர்ப்பு கூறி பிரச்னையைக் காலங்கடத்திப் போட முயன்ற மௌலானா ஆசாத் இப்போது தான் தோல்வியை ஒப்புக்கொண்டு குழுவை அனுமதித்திருக்கிறார்.

நிலைமைகள் இவ்வளவோடு நிற்கவில்லை. இதன் எதிரொலியாக பஞ்சாப் மாகாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள்கூட கடுமையான கட்டுப்பாடுகளுக்கு ஆளாகி யிருக்கின்றன.

'பிரதாப்' 'இந்த் சமாச்சார்' போன்ற உருதுப் பத்திரிகைகள்; 'வீர அர்ச்சுன்' என்ற இந்தி மொழிப் பத்திரிகை—இந்த தினசரி ஏடுகள் தாங்கள் பிரசுரிக்கும் எல்லாச் செய்திகளையும் அரசாங்கத்தின் அனுமதி பெற்ற பிறகே வெளியிடமுடியும் என்ற நிலைமை பிறந்திருக்கிறது.

அதுமட்டுமின்றி 'பிரதாப்' இதழின் புது டில்லிப் பதிப்பு பஞ்சாப் எல்லைக்குள் விற்பனையாகக் கூடாது என்றும் தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் ஆட்சியாளர்கள்!

எழுத, பேச, சிந்திக்க, சிந்தித்ததை வெளியிட இவ்வளவிற்கும் சுதந்திரங் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்! ஆனால் மூவர்ணக் கொடிக்கு தங்களது செங்குருதியால் குங்கும வர்ணம் தந்த வீரர்களின் பிறப்பிடமாம் பஞ்சாபிலே அந்த உரிமைகள் உலை வைக்கப் பட்டிருக்கின்றன.

1908ம் ஆண்டிலே இப்படித்தான் திலகர் நடத்திவந்த 'கேசரி' ஏட்டினை எதிர்த்து வெள்ளை அரசாங்கம் வழக்கு தொடர்ந்தது.

திலகர் இருபத்தியோரு மணி நேரம் வழக்கு மன்றத்திலே வன்மையும், உண்மையும் நிறைந்த தனது வாதங்களை எடுத்துரைத்தார்.

இறுதியில் அவருக்குக் கிடைத்த பரிசு ஆயிர ரூபாய் அபராதமும் ஆறு ஆண்டுகள் நாடு கடத்தப்பட்ட தண்டனையும்தான்!

பர்மாவிலே உள்ள மாண்டலேயிலே 'கேசரி' பத்திரிகையில் தனது கருத்துக்களை வெளியிட்ட ஒரே காரணத்துக்காக திலகர் சிறை வைக்கப்பட்டார்.

அவருடைய மனைவி, அருமைநிறைக் குழந்தைகளை அனாதைகளாய். ஆதரவற்றோர்களாய் தெருவிலே விட்டுவிட்டு மறைந்தபோது, இல்லாள் எவ்விதம் அடக்கம் செய்யப்பட்டாளோ? குழந்தைகளின் கதி என்ன ஆயிற்றோ? என்ற செய்திகள் ஒன்றும் தெரியாமல் மாண்டலே இருட்டறையிலே உருமாறிக் கிடந்தார், திலகர்!

பேனா பிடித்து, பத்திரிகையிலே, மனதிலே பட்ட கருத்துக்களைச் சொன்னது ஆங்கிலேயன் ஆட்சியிலே குற்றம்—நாடு கடத்தல் அதற்குத் தண்டனை!

இப்போது சுதந்திரம் வந்து விட்டது. ஆனால் திலகர் எதற்காக காராக்கிரகத்தில் வாடினாரோ அந்த அபிப்பிராயம் வெளியிடுவதற்கான சுதந்திரமோ இன்னும் வந்தபாடில்லை!

அதனால்தான் பம்பாயிலே பத்திரிகைகள் கட்டுப்பாட்டிற்கும், தடையுத்தரவுகளுக்கும் ஆளாகி அவதிப்படுகின்றன!

— இருந்தும் வெட்கமின்றி விழா எடுக்கிறார்கள் பேச்சையும், எழுத்தையும், மூச்சையும் நாட்டுக்கே தந்து மறைந்த நாயகமாம் திலகருக்கு!

பத்திரிகைகளுக்கு தடை விதிக்கும் உத்தரவில் கையெழுத்திட்ட கரங்களால் திலகர் படத்துக்கு மாலை —

ஹோசியார்பூரிலே பச்சிளங் குழந்தைகளையும், பாவையரையும் தடிகொண்டு தாக்க ஆணையிட்ட வாயால் 'திலகருக்கு ஜே!' — என்ற கோஷம்—

புராணிகர்கள் நம்புகிறபடி திலகருக்கு ஆவியிருந்தால், அந்த ஆவிகூட மறுபடியும் தற்கொலை செய்துகொள்ளும், இந்தக் கேலிக் கூத்தைக் கண்டபிறகு!

தியாகத்தையே உயிராகவும், உடலாகவும் பெற்றிருந்த திலகர் மறைந்து, அவரது பிணம் இடுகாட்டிலே வைத்துக் கொளுத்தப்பட்டபோது, அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு முஸ்லிம் வாலிபன், அந்தச் சோகம் ததும்பும் காட்சியைக் காணச் சகிக்காதவனாய், 'என் தலைவர் போகிற இடத்துக்கு நானும் போகிறேன்!'—என்று எண்ணியபடி கொழுந்துவிட்டு எரிகிற சிதையிலே உடன்கட்டை ஏறுவதுபோல தாவிக் குதித்துவிட்டானாம்!

—அந்த உன்னத நிலையை அடைய இன்றைய ஆட்சிபீடமேறிகள் முயற்சிப்பதாகத் தெரியவில்லை.

நாம் நிச்சயமாகக் கூறமுடியும் — கொடுங்கோலர்கள் கண்களை மூடும்போது பொதுமக்கள் 'உடன்கட்டை' ஏறமாட்டார்கள்; காரி உமிழ்வார்கள்; கல்லெடுத்து வீசுவார்கள்!

—ஹோசியார்பூரில் நடந்தவைகளைக் கேட்கும்போது, சம்மந்தப்பட்டவர்களுக்கு நாம் இந்தப் பொன்மொழியைத்தான் காணிக்கையாக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்! க

நீட்டோலை

அன்புள்ள பொன்முடி,

மனிதனுக்கு வாழ்க்கையிலே பெருமைக்குரிய நிகழ்ச்சிகள் எத்தனையோ வந்து போகின்றன.

முத்துப் பல்லும் — பவள இதழும் கொண்ட மோகன காந்த வடிவழகியின் அருகிலே அமர்ந்திருப்பவன்; "ஆகா! இவனன்றோ பாக்கியம் பெற்றவன்" என்று ஒருசில பெருமூச்சுக்காரர்களால் அளிக்கப்படும் பட்டத்தை மட்டும் பெருமைக்குரிய விஷயமாகக் கருதிப் புளகாங்கிதமடைவான்.

விண்முட்டும் ஆலயம்போல அழகான வீடு—கண்ணாடி பதித்திட்ட சுவர்—வீடெங்கும் கனக மணிக் கட்டில் — சப்ரகூடம் — 'அப்சரஸ்' மாடம் — இப்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டு படாடோப 'பருக்' மன்னர்கள் பெற்றிருந்த பண்பு மட்டுமே பெற்றிருப்பவர்கள், "அவனுக்கென்னய்யா— அனுபவிக்கப் பிறந்தவன" என்ற புகழ்ச் சொற்கள் கேட்பதையே பெருமைக்குரியதாகக் கருதுவார்கள்.

"அதோ தெரிகிறதே; அந்தத் தென்னந் தோப்பு—அதிலிருந்து தெற்கே மூனறு கல் தொலைவும், வடக்கே நாலு கல் தொலைவும் விரிந்து பரந்து கிடக்கும் நிலமனைத்தக்கும் அவனே உடமைக்காரன். இத்தனையும் சுயார்ஜிதமாக அவன் சம்பாதித்த சொத்து!"

—என ஊரார் பேசிக்கொண்டு போவதை யாராவது கேட்டுவந்து, கணக்கன் காதிலே போட்டு, கணக்கன் பணக்காரன் காதிலே போடுவான். அந்த கௌரவத்தை நினைத்து நினைத்துப் பெருமையடைவான சீமான்; அது அவனுக்குப் பெருமைக்குரிய சேதி!

"முன்பு மூன்று முறை மந்திரியாக இருந்தார். இரண்டு முறை தேர்தலிலே தோற்றார். ஆனாலும் அவரை மிக சாமர்த்தியமாக மந்திரியாக ஆக்கி விட்டார்கள். மிகவும் கெட்டிக்கார மனுஷன். வில்லாதி வில்லன். பதவியிலிருந்து அவரை யாராலும் விரட்ட முடியாது!"

— இதையும் பெருமைக்குரிய பேச்சாகக் கருதி தங்களைத் தாங்களே நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டு நிமிர்ந்து நிற்போரும் உண்டு!

" ஆள், சரியான ராஜதநதிரி! காங்கிரசில் நின்ருல் வோட்டுக் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டார். சுயேச்சையாக நின்று காங்கிரசையே எதிர்த்தார். வென்ருர். கடைசியில் காங்கிரசில் சேர்ந்து மந்திரியாகி விட்டார். அதுதானய்யா அரசியல் 'டேக்டீஸ்!' ராஜதந்திரம்!"

—இப்படிப் பட்ட பெருமைக்குரிய விருதுகளால் பரவசமடைகிற பச்சோந்திப் பண்பாளரும் நிறைய — நிறைய!

"வியாபார மூளை யென்ருல் அவர் மூளைதான் சார்' மார்க்கெட் நிலவரத்தைத தீர்க்கதரிசி மாதிரி கண்டுபிடித்து பணத்தைக் குவிக்கிருர் சார்! பலே ஆசாமி! பக்கா பிசினஸ் மேன்!"

–பெருமைக்குரிய செய்திதான் இதுவும் சில வணிக வேந்தர் கட்கு!

"பிறவி நடிகன் என்ருல் அவனே தான்! மின்னலைப் போல மாற்றுகிருன் முக பாவங்களை! விழியைச் சுழற்றி விழித்தான் என்ருல் வீரபாண்டியக் சட்ட பொம்மனும் இந்தக் கண் பெற்றிருந்தானே—என ஐயுறத்தான் வேண்டியிருக்கிறது. கனல் காட்டுகிருன். புனல் கொட்டுகிருன். அனல்பட்ட புழுவின் வேதனையை முகத்தில் தேக்குகிருன். மிக நல்ல குணசித்திர நடிகன்!"

–பெருமைக்குரிய புகழாரமாகத் தானிருக்கிறது அவனுக்கு!

'இசை வெள்ளம் பாய்ச்சுகின்ற புலவன்—ஈடற்ற தமிழ் மொழிக்கு இன்பமளிக்கும் பாவேந்தன்—பாம்பும் மயங்கும் அவன் பாடல் கேட்டு!"

—இசையரசன் இந்த மதிப்போலையை பெருமைக்குரியதாகக் கருதி மகிழ்கிருன்.

சிலை வடிக்கின்ற சிற்பி—சித்திரம் ஆக்குகின்ற ஓவியன்—சிந்தனைக் கருவூலங்களை அளிக்கின்ற எழுத்தழகன்— இவர்களெல்லாம் சந்திக்கின்ற பெருமைக்குரிய நிகழ்ச்சிகள் விருது பெறும் விழாக்கள்தானே!

மேலே கண்டவைகளும்— அதற்கு மேற்பட்டவைகளும் பின்னடைகிற அளவுக்குப் பெருமைக்குரிய செய்தியொன்றிருக்கிறது தோழனே!

ஆலயம்போன்ற வீடுடையான் —ஐயாயிரம் பெறுமானமுள்ள வைரத் தோடுடையான் — ஆள் அம்பு ஏராளமுடையான்—அழகிகள் பலருடையான் — ஆண்மையுடையான்—அற்புதத் தமிழ் எழுதும் ஆற்றலுடையான் — அபூர்வக் கலைத் திறமையுடையான்— அயல்நாடு பல கண்ட அனுபவமுடையான்-இன்னோரன்ன பெருமைகளை விட — **அடிமை நாட்டை விடுவிக்கும் எண்ணமுடையான்** என்ற பெருமை யிருக்கிறதே, அதற்கு ஈடேது! இணையேது!

மாணிகக முத்து வடம் அணிவிக்க மாட்டார்கள்; கசங்கிய மலர் மாலைகளே கிடைக்கும் — அவைகளையும் கல்பட்டுப் புண்பட்ட கழுத்தினிலே சுமந்திடுதல் வேண்டும்! பொன்மணியும், பூரிப்பு தரும் கண்மணியும் அருகிருப்பது அரிது! பூட்டியிருக்கும் சிறைக்கூட்டில் சிறகிருந்தும் பறக்கவொண்ணுக் கிள்ளைகளாய்ப் படுத்திருக்க வேண்டும்!

நாட்டு விடுதலைக்கு வாள் தூக்கும் தருதலையே! "தா உன் தலையை" என்று கொலை வெறியைக் குழந்தை விளையாட்டாய்க் கருதுகின்ற கொலுப் பொம்மை அரசு கூவும்! அடக்குமுறை தாவும்! அக்கினி அம்புகளை ஏவும்!

சாவும் வாழ்வும் ஒன்றுதான்— என்றுரைக்கும் சுதந்தர வாய் கிழிய பீரங்கி முழங்கும்! துப்பாக்கிச் சனியன நீளும்!

மண் மீட்க வந்தவனே! விடுதலைப் பண்பாடும் பித்தனே! உந்தன் கண் மீட்கும் ஆசையிருந்தால் ஓடிவிடு! — எனச் சொல்லி கனல் கக்கும் பழுத்த ஆணி!

ஆசி பல பெற்று அன்னைத் திருநாடு காப்பதற்கு வந்தவனே! ஊசிகளைக் கொண்டு உந்தன் நகங்களிலே குத்திடுவோம், உண்மையைச் சொல்லிவிடு — இனி ஒழுங்காக இருக்கிருயா?—எனக் கேட்கும் அதிகாரக் கும்பல்!

"ஏனப்பா, உனக்கந்த வம்பெல்லாம்-தேனப்பா உன் மனைவி, மக்கள்! வீணப்பா உன் விடுதலைப் போர் எனச் சொல்லி, காணப்பா புதுக் குடும்ப வாழ்வு!" என ஊர் அழைக்கும்!

சீர் தழைக்கும் எனச் சிரித்து பதவித் தேர் அழைக்கும்!

யார் அழைத்தால் என்ன?
எவர் தடுத்தால் என்ன?
என்ன இடையூறு முளைத்தால் தான் என்ன?

அன்னைத் திருநாட்டு விடுதலைக்கு என்னையே நான் விலையாகக் கொடுத்திடுவேன் — என எழுப்புகின்ற குரலேதான் பெருமைசால் சேதியாகும்!

நீ என்னை நண்பன் என்று அழைக்கின்ருய். பத்திரிகை உலகிற்கு நான் 'முரசொலி'யின் ஆசிரியன். திரையுலகில்—நூல் உலகில்-ஏட்டுலகில்—நான் எழுத்தாளன். நடிக்கவும் கற்றிருக்கிறேன் ஒரு சிறிது. சொற்பொழிவும் தெரியும். ஆனால் **கருணாநிதி என்ற பெயர் இவைகளால் முழுமை அடையவில்லை நண்பா!** இதோ, இந்தப் பட்டயத்தைப் பார்! விடுதலை அணி வகுப்பிலே நானுமோர் உறுப்பினன் என்று அறிவிக்கிறது! எட்டணா கொடுத்து பெற்றுவிடக் கூடிய சீட்டு அல்லவே இது!

நாட்டு விடுதலைக்குக் கொடி தூக்கும் வீரனென்று அறிவிக்கும் விருது நண்பா! நானும், நீயும் மற்றவர்களும் பழையபடை வீரர்கள்— பட்டயத்தைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிருேம். இன்னும் பலர் விடுதலை அணி வகுப்பில் நிறைந்தவண்ண மிருக்கின்ருர், அவர்களெல்லாம் இதுபோல ஒரு பட்டயம் பெற்றிடுவார்! வீரப் பதக்கம் அது வென்று பெருமைப் பட்டிடுவார்! இதைப் பெறுகின்ற நிகழ்ச்சி வாழ்நாளில் பெருமைக்குரிய நிகழ்ச்சியல்லவா?

என் வாழ்க்கையிலே பெருமைக்குரிய நிகழ்ச்சிகள் எவை?— என்று உன்மடல்மூலம் கேட்டிருந்தாய். படைத் தலைவனின் கையொப்பம் கொண்ட விடுதலைப் படையின் பட்டயத்தைப் பெற்றதைவிட பெருமைக்குரிய நிகழ்ச்சி வேறென்ன இருக்கிறது; உன்னிடத்தில் சொல்ல!

நான்பெற்ற இப்பெருமையை திராவிடத் தரணியிலுள்ளோர் அனைவரும் பெறட்டும்! தி. மு. கழகத்தில் சேரட்டும்-திராவிடம்விடுதலை அடையட்டும்! அதுதானே எனக்கும், உனக்கும், நம் பாசறையில் உள்ளவர்க்கும் உயிரினும் மேலான கடமை!

உன்
அன்புத் தோழன்.

திராவிட முன்னேற்றக் கழகம்
உறுப்பினர் உரிமைச் சீட்டு
பெயர் மு. கருணாநிதி (31)
ஊர் திருவாரூர்
வட்டம் நாகை
மாவட்டம் தஞ்சை
எண்: 7237
இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர்.

சிறு கதை.

முத்துப் பல்லக்கு!

ஏ. கே. வில்வம்

மணிமுடி தரித்த ராஜாக்கள் பல்லக்கில் ஊர்ந்துசென்றுகொண்டிருந்த பழங்காலம். முன்னே ஒருவனும், முதுகு கூனிப்போய் பின்னால் ஒருவனும், சுருக்கம் விழுந்த நெற்றியிலே உழைப்பால் வழியும் வியர்வைச் சாறு கீறல் போட, நகர்ந்து கொண்டிருந்தது அந்த முத்துப் பல்லக்கு!

ஓலத்திற்குக்கூட இசையமைத்து ஒப்பாரியாக்கிப் பாடும் தமிழ் ஜாதி-எனவேதான், தோள் வலிக்க வலிக்க, பொதிமாடுகள் போல சுமை தூக்கிச் செல்லும் போதும் இசை கூட்டி 'ஏலேலோ' பாடிச் சென்றனர் அந்த தேய்ந்து போனவர்கள்.

★

குன்று பல நீந்திவரும் தென்றல், பூம்பொழில், குளிர் பொய்கை, கோலம்தவழ் சூழ்நிலை! இடக்கரத்திலே பூக்குடலை, சிவந்த ரோஜாவும், சிரிக்கும் முல்லையையும், தேன் அரும்பி கொடியிலே கூத்தாடும் செண்பகமும், முல்லை மலர்களையும் அவள் வலக் கரத்தால் பறித்துப் பறித்து பூக்குடலையை நிரப்பிக்கொண்டிருந்தாள். அவள் அரும்பு விழிகள் அவசரத்தைக் காட்டிக் கொண்டிருந்தன.

முகில் மாடத்திலிருந்து மிதந்து வரும் ஒலியைப்போல ஆலய மணி தன் பெரிய நாக்கால் டாண்...! டாண்...! என்று ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது.

மணியோசைக் கேட்டதும்' வண்ண மலர் கொய்துகொண்டிருந்த அவள் கரங்கள் ஓய்ந்தன. கொவ்வைச் செவ்வாயின் கடைக் கூட்டிலே குறுநகை குமிழ்விட, அவள் கருவிழிகள் குடலையை நோக்கின. தேன் குடிக்க வாய் பிளக்கும் வண்டுபோல அவள் வட்டக் கருவிழிகள் பூவண்ணத்திலே தோய்ந்து நின்றன. கூலிக்கு மாரடிக்கும் பூசாரி, தினம் தினம் பறித்துப்போடும் அலறி பூவைவிட அம்பாளுக்கு இந்தப் பனிதூங்கும் மென் மலர்கள் பிரீதியாக இருக்கும்! அவள் செவ்விதழ்கள் தனக்குள்ளாகவே இப்படி அசைந்து கொண்டன.

மணியோசை அதிகரித்துக் கொண்டேஇருந்தது. ஆலயத்தின் தலைவாயிலை நெருங்கிவிட்டாள் பொன்னி! அந்தக் கரம்படா கன்னிக்கு செத்துப்போன அவள் அப்பன் வைத்துவிட்ட பெயர் அதுதான்! ஆலயத்தின் மூன்றுவது வாயிலையும் கடந்துவிட்டாள். மூலக் கிரகத்தை—அதுதான் அம்பாளுக்கு பக்தகோடிகள் ஒதுக்கி விட்டிருந்த அந்தப்புரம்! அதை நெருங்கியபோது பொன்னியின் கால்கள் தாமாகவே நின்றன! அவள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்து கொடுத்தது! ''ராஜாவா ...!'' அச்சத்தால் ஸ்தாயி குறைந்து ஒலித்தது அந்த வார்த்தை!

ராஜ மரியாதைகளோடு, அர்ச்சனையை முடித்தான் பக்தன்!

''மன்னுள் வேந்தே! நின் வாழ்நாள் சிறப்பதாக, நின் கொற்றம் செழிப்பதாக!'' காசுக்கு வாழ்த்தினன்; வாய் இளித்து நின்றான். மன்னனின் முகம் மலர்ந்தது, அவன் கரத்திலே இருந்த ஒரு பொன் நாணயம் பூசாரியின் விபூதித் தட்டிலே விழுந்தது. சேவகர் முன் செல்ல, மன்னன் வெளியே வந்துகொண்டிருந்தான்

பல்லக்கு தூக்கிகள் சாளரங்களில் தொங்கிக் கொண்டிருந்த பட்டுத் திரையை விலக்கி மன்னனுக்கு வழி விட்டு நின்றனர். பல்லக்கிலே ஏறி விட்டான்; இல்லை இல்லை, தரையிலே ஒரு காலும் பல்லக்கில் ஒரு காலுமாக நிற்கின்ற நிலை. ஆலயத்திலே யிருந்து வந்த குயிலோசை: குயிலோசையா அது; பொன்னியின் குரலோசை! மன்னன் மணிமாறனை ராஜ விக்ரகமாக்கி விட்டது. ஆலயத்திலிருந்து வெளி வந்த மன்னன் மீண்டும் உள்ளே நுழைந்தான் தலை வாயிலைக் கடக்க இரண்டடிகள்...அதற்குமேல் அவன் கால்கள் அசையவில்லை! மன்னன் வருவது தெரிந்தால், அச்சத்தால் அழகி தன் பாட்டை நிறுத்தி விடுவாள், மீளா சுகம்தரும் அந்த மோகன ராகத்தை மீண்டும் எங்கே? எப்போது கேட்க முடியும்! எத்தனையோ ராஜ நர்த்தகிகள், அத்தாணி மண்டபத்து விருது பெற்ற பாடகிகள், வீணை மீட்டி கானம் எழுப்பும் விறலிகள், யாழ் இசைத்து தமிழ் இசை பொழியும் பாணர்கள், கூத்தர்கள் பலப்பலர் பாடக் கேட்டிருக்கிறன், பரவசத்தி லாழ்ந்திருக்கிறன்.

ஆனல் இப்போது அவன் கேட்பது...! கீதமா அது!; தொல்லையில்லா சுந்தர பூமிக்கு—சுக மாளிகைக்கு அவனைத் தூக்கிச் செல்லும் சங்கீத ரதத்திலே ஊர்ந்து செல்லுவதைப் போல ஒரு மயக்கம், எழில் காட்டி மறையும் வானவில் போல குரல் எடுத்துக் கூவி ஓய்ந்தது அக்குயிற்பேடு!

பாடி முடித்து, குடலையிலே இருந்த தேன் மலர்களை, அருள் வழியும் கண்களோடு அம்பாள் சிலை மீது அள்ளிச் சொறிந்து திரும்பினள்! தன் கீதத்தை நாட்டின் காவலன் இதுவரையில் ரசித்துக் கொண்டிருந்ததை அப்போது தான் அவள்கவனித்தாள். நாணத்தால் அவள் முகம் சிவந்தது. கன்னங்களில் குங்குமச் சிவப்பு குவிந்தது!

இசை மழையால் நனைந்த களைப்பு, இன்பக் களைப்பு தான்! மன்னன் அப்பொழுதுதான் தன் நினைவிற்கு வந்து கொண்டிருந்தான்!

''பெண்ணே நீ யார், எங்கிருக்கிருய்?'' மன்னன் பொன்னியின் அருகிலே வந்து கேட்டான்!

''யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம் மன்னனேடு உறையாடுகின்றபாக்கியம்! குட்டி கொடுத்து வைத்தவள்தான்!'' -கூட்டத்தின் ஒரு பகுதியிலே இருந்த பொருமைப் புலிகளின் முனகல் இது!

''மாட வீதி...அதோ அந்தக் கோடி வீடு...நான் வர்ரேன்... வணக்கமுங்க!'' தட்டுத் தடுமாறி எப்படியோ இத்தனை வார்த்தைகளைப் பேசி விட்டாள். அவள் செவ்வாழைத் தண்டு போன்ற கால்கள் தரையிலே பொருந்தவில்லை, ஓட்டப் பந்தயத்திற்கு நின்று கொண்டிருக்கும் உயர்ந்த ஜாதிக் குதிரையின் தரையோடு தாளம்போடும் குளம்படிகளைப் போல அவள் செம்பஞ்சு சாயம் பூசப்பட்ட மலரடிகள் குதித்தன.

ஓட நினைத்தவளை மீண்டும் அழைத்தான் மன்னன்!

''ஊரறிந்தேன்; யார் பெற்ற மகளோ? பெயரென்னவோ?''

''எம்பேரு பொன்னி: ராஜாங்கத்து சிற்பி எங்கப்பா!''

மணிமாறனின் விழிகளிலே வியப்பின் சாயல் நிழலாடிற்று!

''சிற்பி செங்கோடனின் மகளா நீ? செங்கோடனுக்கு இப்படி ஒரு செந்தாமரை யிருப்பது இத்தனை நாள் தெரியாதே எனக்கு!''

''சரிங்க...நான் வர்ரேன்'' அங்கிருந்து விடுபட்டால் போதும் என்பதுபோல் வார்த்தைகளைக் கொட்டினுள்.

''......மாடவீதியை நடந்து தானே நானும் போகவேண்டும்; வா பொன்னி — பல்லக்கில் ஏறிக் கொள்; உன் வீட்டில் இறக்கி விட்டு, அப்படியே செங்கோடனிடம், இந்தக் குயிலை யேன் கூண்டிலே அடைத்து வைத்திருக்கிருய்: இந்தக் குயிற் பேடு நடைபோடவேண்டிய இடம் உன் சிற்பக்கூடமல்ல...அரண்மனை சித்திரக்கூடம் என்று சொல்லிவிட்டுப் போகிறேன்; வா பொன்னி...பல்லக்கிலேறிக்கொள்!''

அச்சம்—கூச்சம்!—நாணமும்—பயிர்ப்பும் நங்கையர்க் கணிகலம் என்ற உடலோடு ஊறிப்போன 'அந்தக் காலத்து'ப் பெண்மை! இத்தனையும் அவள் உள்ளத்திலே கூத்தாடின!

''ஏன் தயங்குகிருய்...?'' அன்போடுதான் கேட்டான் மன்னன். வாய் திறக்காமல் ஏறினுள்; நாணிக் கோணி பல்லக்கின் ஒரு மூலையிலே உட்கார்ந்தாள். அவள் உடல் அணு ஒவ்வொன்றிலும் நடுக்கம். நெஞ்சத்திலே அதிர்ச்சி. அதன் விளைவாக அவள் சந்தன மேனியெங்கும் முத்துமுத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன.

★

'கால வெள்ளத்தாலும் அழிக்க முடியாத அமரப் படைப்பு நீ! கலை சமைக்கும் என்னையே நிலை தடுமாறச் செய்திடும் காந்த விழிகளை எங்கிருந்து பெற்றுய்? சாகாத அழகையெல்லாம் சிலையாக வடித்திருக்கும் என் நெஞ்சத்தையே சூறையாடும் சுந்தர முகப் பொலிவை எப்படிப் பெற்றுய்! பொன்னி, எத்தனையோ அழகுமிழும் சிற்பமெல்லாம் என் கைபட்டு, கலை பேசிற்று. ஆனுலும் என்னைக் கவர்ந்ததில்லை. உன் கண்களில் கூத்தாடும் அந்த ஜீவன்இதற்குமேல் ஏது கலை என்கிறது? குறை ஒன்றுண்டு என் கோமளமே! உன்னைப் பேச வைக்க முடியாது என்றால்!'' என்று கூறிக்கொண்டே, மாங்கனி வகிர்ந்தார்போலிருந்த அச்சிலையின் கன்னக் கதுப்புகளைத் தடவிக் கொடுத்தான் சிற்பி வாணன், செங்கோடனின். தங்கை மகன்! பனி மூட்டத்தில் நீந்திவரும் நிலா போல மங்கிய மஞ்சள் நிறம் பெற்றிருந்த அப் பளிங்குச் சிலையை பார்த்தவிழி எடுக்காமல் மொய்த்து நின்றான்.

தான்பெற்ற மழலையின் மாணிக்க உடல் தழுவி மகிழ்ந்து நிற்கும் தாய்போல; தன் படைப்பின் திறம் வியந்து தன்னையே மறந்து நின்றான் வாணன்!

அரச ஊர்வலம்! ஆலயத்திற்கு சென்ற மன்னன் திரும்பிவரும் ஆரவார ஒலி! வாணனின் நினைவுகளைத் திருப்பிற்று. அரச தரிசனம்—அந்தக் காலத்து மனிதர்களுக்கு அதிலேதான் எவ்வளவு பூரிப்பு! கையிலே இருந்த சுத்தியலையும், சிற்றுளியையும் கீழே வைத்து விட்டு வாணன் தெருப்பக்கம் வந்தான். கூப்பிடும் தூரத்தில் பல்லக்கு நின்றது. முதலிலே மன்னன் இறங்கினன்; அவனுக்குப் பின்னல்...இறங்கும்போதே அவள் கால்கள் இடறிவிட்டது. தரையிலே விழுந்திருப்பாள்—மணிமாறனின் கரங்கள்மட்டும் அந்த நேரத்தில் அணைத்துப் பிடித்திராவிட்டால்......'பொன்னி!' இதயத்தின் ஆழத்திலே இருந்து பீறிட்டு வந்த ஆத்திரம் வார்த்தைகளாக வெளிவருவதற்குள் வயிற்றிலேயே கரைந்து மறைந்தது. வாணனின் முகம் குப்பென்று சிவந்தது. அவன் கண்களில் சினத்தின் சாயல் படர்ந்திருந்தது.

''வாணனுக்கேற்றவள் பொன்னி; சோடை சொல்ல முடியாத ஜோடி! செங்கோடா, கொடுத்து வைத்தவனப்பா நீ''

அரண்மனைச் சேவகன் ஒருவன்; அன்றொரு நாள் செங்கோடனிடம் பேசிக்கொண்டிருந்தபோது சொன்ன இந்த வாசகங்கள்! தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டான் வாணன். ''ஆமாம்! மணிமாறன் கொடுத்து வைத்தவன் தான்!'' அவன் உதடுகள் பற்களுக்கிடையே சிக்கித் தவித்தன.

அதோ இன்னும் சில நிமிடங்களில் பொன்னி அவன் அருகிலே வந்து விடுவாள்...!

''சீ! மானங்கெட்டவள்...! மன்னன்;மணிமுடி, மரகதக் குவியல்... மந்தகாச வாழ்வு, மயங்கி விட்டாள், மானத்தை சாகடித்துக் கொண்டாள்!''

''இந்த சீர் கெட்டவளையா, சிற்பமாக வடித்தேன், இந்த சிலந்திப்பூச்சியின் வெளிப் பூச்சிலா என் சிந்தையைப் பறி கொடுத்தேன்.''

''இந்த சிழ்வடியும் மனத்தாளின் சிவந்த கன்னங்களிலா இதழ் சித்திரம் பதித்து மகிழ்ந்தேன்! இந்த நடமாடும் நாசத்தையா, மானே, நளின மலர்த் தேனே என்று அர்ச்சித்தேன்!

'சீ!' அவள் உள்ளக் குமுறல்கள் எல்லாம் 'சீ' என்ற அந்த ஒரு வார்த்தையிலே திரண்டு நின்றது.

புயலில் சிக்கிய படகுபோல திசை தெரியாமல் தத்தளித்தது அவன் உள்ளம்!

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

சென்ற இதழில்...

● மருத்துவ மனையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த சிந்தாமணியை விடுவித்து, அவளிடத்திலே சரசமாடத் தொடங்குகிருன் டைகர்! அவளோ தன்னைக் காத்துக் கொள்ளத் தயாராகிருள். எப்படியும் அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேம் என்ற நம்பிக்கையில் சிந்தாமணியை வீட்டுக்கு அனுப்பத் தீர்மானித்து ஒரு வண்டியையும் ஏற்பாடு செய்கிருன். அவள் வண்டியில் ஏறி உட்காருவதற்கு எதிர்பாராத விதமாக டைகர் துணைபுரிகிருன். அதைக் கண்டுவிடுகிருர் அங்கு தலைவிரி கோலமாக ஓடிவரும் சிவநேசர். "அடி விபச்சாரி!" என்று கத்துகிருர். 'அப்பா' என அலறியபடி சிந்தாமணி வண்டியிலிருந்து விழுகிருள்... பிறகு.

*

11

மற்றுமொரு வாய்ப்பு கிடைத்தது அந்த மாம்பழ மேனியாளைத் தொடுவதற்கு என மகிழ்ந்த டைகர், கீழே விழுந்து கிடப்பவளை அவசர அவசரமாகத் தூக்குவதற்கு முனைந்தான். சிந்தாமணி, அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் திமிறியவாறே 'அப்பா' எனக் கூவியழுதவாறு சிவநேசருக்கு முன்னே ஓடுவதற்கு முயன்ருள். "அவரிடம் போகாதே—அவர் வெறிபிடித்துப் போயிருக்கிருர்"என்று சப்தமிட்டபடி டைகர், அவளை இறுக அணைத்துக் கொண்டானே தவிர, பிடியைச் சிறிதும் தளர்த்தவில்லை.

சிவநேசர், பாய்ந்து வரும் வேங்கை போல அவர்களிடம் ஓடிவந்தார். "குலத்தைக் கெடுத்தவளே! கோணல் வழி போனவளே! ஆகாகா......என் அபூர்வ சிந்தாமணி.........அபிதான சிந்தாமணி......அய்யோ! அய்யோ!! என்னையும் என் மனைவியையும் கொலை செய்த கொலைகாரி! குடிகேடி! சிந்தாமணீ—சீரழிந்த மணீ! பேயாகப் பிறக்கவேண்டியவளே! பெண்ணுகப் பிறந்த பூதமே!" என்று வசைமாரி பொழிந்தார் சிவநேசர். சிந்தாமணி "அப்பா!" எனக் கதறினளே தவிர வேறெதுவும் பேச முடியவில்லை!

"சும்மா இரு சிந்தாமணி! உன் அப்பாவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது' அவரிடம் பேச்சுக் கொடுக்காதே!" என்று அவள் வாயைப் பொத்தினன் டைகர், சிந்தாமணிக்கு ஆத்திரம் எல்லை மீறிவிட்டது. அதனல் ஒரு புதிய தெம்பு உதயமாயிற்று அவளுக்கு! ஓங்கி ஒரு அடி கொடுத்தாள் அவன் கன்னத்தில்! அவள் அணிந்திருந்த வளையல்கள் நொறுங்கி அவன் கன்னத்திலே ரத்தக் கோடுகள் விழுந்தன. "அடி! அடி!! நன்ருக அடி! அடி! அடிகள்ளி! ஆத்துக்காரரை ஏனடி அடிக்கிருய்?" என்று கேட்ட சிவநேசர்,

"என்ன குற்றம் செய்தானவன்?
கன்னத்தில் ஏன் அடிக்கின்ருய்?
பெண்ணே நீயும் சொன்னுல்
போச்சு!......
பின்னே எந்தன் கோபம்
பொங்கும்!"

என்று பாடவும் ஆரம்பித்தார். சிந்தாமணிக்கு டைகர் கூறியது உண்மைதான் என்பது தெளிவாகி விட்டது!

" காதல்-காதல்-காதல்-காதல்!
கள்ளக் காதல்!
உள்ளக் காதல்!
உண்மைக் காதல்!
ஒருதலைக் காதல்!
உருப்படாக் காதல்!"

என்று பிதற்றியபடி நடனமாடத் தொடங்கினர். நடுவீதியில்! கலகலவென பயங்கரத் தொனியில் நகைத்தார். திடீரென அழுதார். ஆத்திரமாகக் கத்தினர்.

"மண்ணுய்ப் போக—
மண்ணுய்ப் போக!
மாப்பிள்ளை பெண்ணும்
தோப்பிலே தென்னங்
கண்ணும்......
மண்ணுய்ப் போக!"

என்றபடி தெரு மணலை வாரி டைகரின் முகத்திலும் சிந்தாமணியின் முகத்திலும் இறைத்தார். சிந்தாமணியை விட்டுவிட்டு டைகர், தன் கண்களைத் துடைத்துக் கொண்டபடியால் அவள் ஓடிவந்து சிவநேசரின் காலை பிடித்துக் கொண்டு, "அப்பா! அப்பா! இதென்னப்பா கோலம்?" எனப் புலம்பி அழுதாள்.

"கோலமா? இதுதான் அலங்கோலம்! அவசரக் கோலம்! அள்ளித் தெளித்த அவசரக் கோலம்! பொங்கலுக்குப் போடுகின்ற புதுக் கோலம்! தண்டகாரண்யம் வந்திருக்கும் இந்த தசரதனின் தவக் கோலம்! சைவத் திருக்கோலம்! அடியே! காரைக்கால் அம்மையே! நீ உடனே: உடலைப் பேயுருவாக்கி, தலைகீழாக நடந்து கைலாசத்திற்கு ஓடிவா! நான்தான் சிவபெருமான்—நெற்றிக் கண்ணன்! இயற்பகை நாயனுரின் மனைவியைப் பரிசோதிக்கப் புறப்பட்டிருக்கிறேன், சிறுத் தொண்டரின் பிள்ளையைக் கரி சமைத்துச் சாப்பிடப் புறப்பட்டிருக்கிறேன், தாருகாவனத்து ரிஷி பத்தினிகளையெல்லாம் சோதனை செய்ய எழுந்தருளியிருக்கிறேன். இதோ, என்னுடைய கருட வாகனம்—இதிலே ஏறி கற்புக்கரசிகளைப் பரிட்சை செய்து பார்க்க பறக்கப் போகிறேன்" என உளறியவாறு சிவநேசர், வண்டியிலே ஏறி உட்கார்ந்து கொண்டார். அப்போது அங்கே சிவகாமி பரபரப்போடு ஓடிவந்து கொண்டிருந்தாள். தாயாரை மகள் காணவும், மகளைத் தாயார் காணவும்—இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு விம்மி விம்மி அழவும்—சிவநேசர் அதைக் கண்டு உரத்த குரலெடுத்துச் சிரிக்கவும்—அந்த இடமே ஒரு சோகக் காட்சியின் களமாக அமைந்து விட்டது.

தாயும் மகளும் சந்தித்த நிலையில் எதுவுமே பேசத் தோன்றவில்லை அவர்களுக்கு! "என்னம்மா செய்கிறது அப்பாவுக்கு? காலையில் எல்லாம் நன்ருக இருந்தாரே!" என்று வருத்த மிகுதியோடு கேட்டாள் சிந்தாமணி. "எல்லாம் உன்னுல் வந்த வினைதானடா கண்ணு! வெள்ளிக்கிழமை பொழுது விடிந்தாலும் விடிந்தது—நம்ப குடும்பத்துக்கு விநாச

காலமும் வந்து முடிந்தது!" என்று தேம்பி அழத் தொடங்கினுள் சிவகாமி.

அந்தச் சோகக் கட்டத்தில் டைகர் குறுக்கிட்டான். "அத்தே! நடுத்தெருவிலா உங்கள் ராமாயணமெல்லாம் நடத்த வேண்டும்?" என்று சற்றுக் கண்டிப்பாகவும் கடுமையாகவும் கேட்டான். அவனுக்கு பதில் சொல்வதற்குப் பாய்ந்தோடிக் குதித்து வந்தார் சிவநேசர்.

"ராமாயணத்தை நடுத்தெருவில் நடத்தாமல் வேறு எங்கேயடா நடத்துவது? ராமாயணத்திலேயே

மு.கருணாநிதி

முக்கால் வாசி கதை காட்டிலே நடந்ததுதானேடா! நாட்டிலே நடந்தது நாலில் ஒன்று! ராமனும் சீதையும் காட்டிலே இருந்தது பதினுலு வருஷம்—பிறகு வால்மீகியும் சீதையும் காட்டிலே இருந்தது பல வருஷம்—இதற்கிடையே அசோக வனம்—அனுமார் தாண்டிய கடல்—அவனும் சுக்ரீவனும் மறைந்து திரிந்த காடு—பாலகாண்டத்திலே விசுவாமித்திரனேடு அலைந்ததும், தாடகையைக் கொன்றதும், அகல்யாவைக் காலால் மிதித்து வாயால் வாழ்த்தியதும் கானகத்தில் தானே! அதனுல் ராமாயணம் என்பது ஒரு காட்டுக் கதை! காட்டிலே உள்ள பிராணிகள் சிலவற்றை கதாநாயகனுகவும் கதாநாயகியாகவும் வைத்து எழுதப்பட்ட கதை! ஆகவே ராமாயணத்தை நடுத் தெருவில் நடத்தலாம்! ஏ, சிவகாமி! நீ நடத்து ராமாயணத்தை! இதோ இவள்தான் காணுமற்போன சீதை! ஹே ராவணு! நீ ஏன் சீதையைத் தூக்கிக்கொண்டு வந்தாய்?...சொல்! சொல்!!"

—இப்படி வாய்க்கு வந்தவாறு பேசிக் கொண்டும்—பிதற்றிக் கொண்டும் நின்ற சிவநேசரைப் பார்த்து, சிவகாமி, சற்று மிரட்டலுடன் "இப்ப சும்மா இருக்கப் போகிறீர்களா — இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே, அவரது கைகளைப் பற்றிக் கொண்டாள். டைகரும் உதவிக்கு ஓடி வந்து, அவரது கைகளைக் கட்டி விட்டான், ஒரு துணியால்! பின்னர் வண்டிக்காரனின் துணையோடு அவரது காலையும் கட்டி, வண்டியிலே கிடத்தினன். சிவகாமியையும் சிந்தாமணியையும் வண்டியிலே ஏறிக் கொள்ளச் செய்து, அவர்களை வீட்டுக்குப் போகுமாறும், தான் காலையிலே வந்து எல்லா விஷயங்களையும் கவனிப்பதாகவும் சொல்லி விடை கொடுத்தான். சிவநேசர் வண்டிக்குள்ளே அங்கு மிங்கும் புரண்டு வண்டியையே கவிழச் செய்து விடுவார் போலிருந்தது. சிந்தாமணியும் அவள் தாயாரும் ஒருவர் முகத்தை ஒருவர் வேதனையோடு பார்த்தவாறு, தங்கள் துன்பத்திற்கு ஆறுதல் அளிக்க யாருமில்லையே என்ற ஏக்கம் பிரதிபலிக்க வண்டியில் உட்கார்ந்திருந்தார்கள், எப்போது வீடு போய்ச் சேருவோம் என்ற கவலையோடு! வண்டி அவர்களது இருதய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல செப்பனிடப் படாத அந்த ஊர்ச் சாலையிலே ஆடி அசைந்து, குண்டு குழிகளில் ஏறி இறங்கி,வீடுநோக்கிப் போய்க் கொண்டிருந்தது.



* * *

பாலையூர் மருத்துவ விடுதியில் ஆனந்திக்கு தன் கையால் ஏதாவது அளிக்கக்கூடிய சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்ற ஆவலோடு துடித்துக் கிடந்த நயினு முகம்மதுக்கு அப்படியொரு வாய்ப்பு நள்ளிரவில் கிடைத்தது. விடுதியின் சட்டப்படி வெளித் தாழ்வாரத்திலே மட்டுமே நயினு முகம்மது தங்கிட முடிந்தது. ஆனந்தியின் அருகாமையிலேயிருக்கும் சூழ்நிலை அமையாமற் போய் விட்டது. ஆனுலும் அவன் தூங்கவில்லை. ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, தாழ்வாரத்தில் இருந்தபடியே அவளைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவள் அசையமாட்டாளா? ஒருக் கணம் விழிக்க மாட்டாளா?—தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். தன்னைத் தவிர மருத்துவ மனையில் யாருமே விழித்திருக்கவில்லையென்பதையும் உணர்ந்தான். அவனுக்கு ஒரு ஆசை: சிறிது நேரம் ஆனந்தியின் முகத்தை அப்படியே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று!

பெண்களை அவர்கள் விழித்துக் கொண்டிருக்கும்போது ஒரேயடியாகப் பார்த்துக்கொண்டிருக்க இயலுமா? இயன்ருலும் அதிலே ரசனையிருக்காது! ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தால் — அந்த நீடித்த நோக்கிலே 'ரசம்' இருக்காது. விரசம்தான் வெளிப்படும். அவன் நோக்க, அவள் நிலம் நோக்குவாள். அவன் நோக்காத போழ்து அவள் அவனை நோக்குவாள். இப்படி மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் விழியை வீசும்போது திடீரென இரு விழிகளும் திருடர்கள் போல் சிக்கிக்கொள்ளும். நாணம் இருவரையும் அடிமை கொள்ளும். பெண்மை கலந்த நாணத்திலே ஒரு பெருஞ் சிறப்பு—பேரழகு காணப்படும், அதை ஆடவன் சுவைப்பான். அதே சுவையை தூங்குகின்ற காதலியின் முகத்தை இடையருது பார்த்துக் கொண்டிருக்கிற காதலன் பெறுவான். இந்நிலை காதலிக்கும் உண்டு.

அந்த ஆசை உந்தித் தள்ள, நயினு முகம்மது மெதுவாகஎழுந்து தாழ்வாரத்தைக் கடந்து, உள்ளே செல்ல முயன்ருன். அவளை நிதானமாகப் பார்த்து ரசிக்க அவன் உள்ளத்திலே அப்படியொரு ஆவல்தீ மூண்டெழுந்தது. அடிமேல் அடிவைத்து நடந்தான். திருட்டுத்தனமாக இப்படி நடக்கும்போதுதான் பாழுங்காலில் "சொடக்கு" முறியும்! "படக்—படக்" என்று கால் விரல்களிலே ஒலி கிளம்பும்! அதைவிட ஆபத்து தொண்டையிலே ஏதோ ஒன்று அடைப்பதுபோல உணர்ச்சி ஏற்படும்! கனைத்துக் கொள்ளத் தோன்றும்! இத்தனை இடைஞ்சல்களும் நயினுவைத் தாக்காமல் இல்லை. நாற்காலியில் உட்கார்ந்து கால் கைகளில் நன்ருக 'நெட்டி' முறித்துக்கொண்டு, கனைத்து முடித்துக்கொண்டு, ஒரு குவளை குளிர்ந்த பானத்தையும் சாப்பிட்டு விட்டு, அந்தக் குளிரிலும் வியர்வையால் நனைந்திருந்த உடம்பைத் துடைத்தபடி ஆனந்தியிருக்கும் கட்டிலின் பக்கம் மெதுவாக வந்துகொண்டிருந்தான். அது வரையில் சும்மா இருந்த கடிகாரம் அப்போதுதானு மணியடிக்க ஆரம்பிக்க வேண்டும்! அதுவும் ஒன்ரு—இரண்டா? பனிரெண்டு மணிகள்! நயினு, பயந்துகொண்டு திரும்பிவந்து பழைய இடத்தில் உட்கார்ந்துவிட்டான். பனிரெண்டு மணிகளை முழக்கிவிட்டு, கடிகாரம் — நயினுவின் இருதய ஒலியோடு போட்டி போட்டுக் கொண்டு சுவற்றில் தொங்கிக் கொண்டிருந்தது. அவனே அன்புக்கும் அச்சத்திற்கும் இடையிலே தொங்கிக்கொண்டு தத்தளித்தான். பின்னர் அன்பு வென்றது. அச்சம் சற்று விலகி நின்றது. மீண்டும் புறப்பட்டான் ஆனந்தியைப் பார்ப்பதற்கு! கொஞ்சம் கால்களை வேகமாக வைத்து, அவள் படுத்திருந்த கட்டிலண்டை வந்து சேர்ந்தான். மங்கிய பச்சை விளக்கு ஒளியிலே அவளது முகத்தைப் பார்த்தபடி லயித்துப்போய் நின்ருன் நயினு முகம்மது, அமைதியான தூக்கம்!

அந்த அழகை ஓவியர்களும் கற்பனை செய்ய முடியாது என்றே அவன் முடிவு கட்டினுன். மூடியிருக்கும் கண்கள் — ஆனுலும் அந்த முகத்திலே எவ்வளவு மோகனம்! சிற்பி வடிக்கின்ற வெண்பளிங்குச் சிலைகளிலே கருவிழிக்கு வர்ணம் தீட்டுவதில்லை. ஆனுலும் அதன் அழகு அணுவும் குறைவதில்லை, அதுபோலவே கருவிழி மூடியிருக்கும் ஆனந்தியின் கண்களிலே அழகைக் கண்டான் நயினு! அந்தக் கண் இமைகளை அவன் சாதாரணமாகக் கற்பனை செய்யவில்லை. காப்பிய நூலொன்றின் மேலட்டையாகவே வர்ணித்தான், மகரந்தப் பொடியை உள்ளே மூடி வைத்திருக்கும் மலரின் இதழ்களோடு ஒப்பிட்டான். அந்த இமைபோல, அவளுக்குத் தானே பாதுகாப்பாக இருந்தால் ....நயினுவின் இருதயம் படபடத்தது! அந்த ஒலி ஒருவேளை அவள் காதில் விழுந்து விழித்துக் கொள்வாளோ என்ற பயத்தில் தன் மார்பை அமுக்கிக் கொண்டான். அவள் முகத்தை விட்டு அவன் விழிகளை எடுக்க மனம் வரவில்லை. அப்படியே அசைவற்று, மயக்கமுற்ற நிலையிலே நின்று கொண்டிருந்தான். அந்த மயக்கத்தில், பலகணியின் பக்கம் ஒரு கரிய உருவம் நின்றுகொண்டிருப்பதை அவன் கவனிக்கவேயில்லை. அந்த உருவத்தின் கையிலே ஒரு கைத் துப்பாக்கி இருந்தது. பலகணித் திரையிலே அந்தஉருவமும், அது பிடித்திருந்த துப்பாக்கியும் நிழல் வடிவத்திலே விழுந்தன, ஆனந்தியின் நித்திரை அழகில் நேத்திரத்தைப் பதித்திருந்த நயினுவுக்கு பலகணிப் பக்கம் கண் திருப்ப நினைவேது? உருவம், கைத் துப்பாக்கியை சரிபார்த்துக் கொண்டதானது பலகணிநிழலிலே நன்ருகத் தெரிந்தது.

(தொடரும்)



உரிமை வாழ்வு

எழுதியவர் : பேராசிரியர், க. அன்பழகன் எம். ஏ.

அரசியற் கருவும், இலக்கிய மெருகும் கொண்டு பேராசிரியர் அன்பழகனர் தனக்கே உரித்தான அணி நடையில் எழுதியிருக்கும் 'உரிமை வாழ்வு' புத்தகம் பக்கத்துக்குப் பக்கம் திராவிடர் விடுதலைப் போராட்டத்துக்கான ஆதாரங்களை அள்ளிக் குவிக்கிறது; துள்ளித்திரிந்த இனம், இன்று எள்ளி நகையாடப் படுவது எதனல் என்பதற்கான காரணங்களை விளக்கமுற எடுத்துரைக்கிறது!

அரசியல்; பொருளாதாரம்; சமுதாயம்; கலை; மொழி; வாணிபம் போன்ற துறைகளில் ஆண்ட இனம் அமுக்கி வைக்கப்பட்டிருப்பதை இந்நூலில் அடங்கியுள்ள பத்து கட்டுரைகளும்,மாற்றாரின் போலிவாதங்களுக்குச் சொல்லாய்ப்பு தரும் வகையில் எடுத்துச் சொல்லும் விதம் இந்த ஏட்டை இலட்சிய வீரர்களின் கரங்களில் திகழ வேண்டிய படைக்கலனுக்குகிறது.

பேராசிரியரின் இலக்கியம் மூழ்கிவரும் இனிய நடைக்காகவும், இலட்சிய விளக்கத்துக்காகவும் பலமுறை படிக்கவேண்டிய புத்தகம், இது!

விலை ரூ. 1—8—0.

வெளியீடு : புது வாழ்வுப் பதிப்பகம், சென்னை-4.

பூக்குடலை

எழுதியவர், கே. ஜி. இராதாமணாளன்.

தோழர் இராதாமணாளன் தமிழகத்து சிறுகதைத் துறையிலே சிறப்பான இடத்துக்கு உரியவர், அவர் அவ்வப்போது எழுதிய பத்து கதைகள் கருத்தைக் கவரும் வகையில் புத்தக வடிவு கொண்டிருக்கின்றன. பத்தும் பலசுவை அமுது! சத்துள்ள பாத்திரங்கள்—நினைத்த அளவில் தித்திக்கும் சம்பவங்கள் —'பூக்குடலை' தரும் மணத்துக்கு இப்படி யெல்லாம் விளக்கம் தரலாம்! நல்ல கதைகளை ரசிக்கும் தும்பிகளுக்கு, பூக்குடலை ஒரு தேனின் தேக்கம்தான்!

விலை ரூ. 2—0—0

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை—2.

மேடையில் பேசுவது எப்படி?

எழுதியவர் டி. எம். காளியப்பா எம். ஏ.

மேடையில் பேசுவது எப்படி?—நாடாள வந்தவர்களுள் பலரே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டு, பயிற்சி பெற்று வரும் இந்த நேரத்தில் ஆசிரியரின் புத்தகம் நன்ருக வரவேற்கப்படுமென்றே நினைக்கிறோம்.

தன்னம்பிக்கையை வளர்ப்பதெப்படி? பேச்சைத் தயாரிப்பது எப்படி? பேச்சைத் துவக்குவது எப்படி? முடிப்பது எப்படி? புகழேந்திய பேச்சாளர்கள் எவ்வாறு பேசினர்கள்?—போன்ற பல தலைப்புகளில் நல்ல முறையில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

பேசுவதற்கு ஆர்வமுள்ள தோழர்களுக்கு இந்தப் புத்தகம் பயன்படும்; மற்றவர்களுக்கு இதிலடங்கியுள்ள பொன்மொழிகள் சுவையும் பயனும் கொடுக்கும்!

ஆனல் ஒன்று—'மேடையில் பேசுவது எப்படி?' என்ற இந்த நூலிற்கு, இந்தப் புத்தகத்தைப் பல முறை படிக்க வேண்டிய நிலையிலே இருக்கும் அமைச்சர் காமராசரிடம் முன்னுரை வாங்கியிருப்பது அவரைக் கேலி செய்வதற்கோ?—என்ற ஐயப்பாட்டைத்தான் ஏற்படுத்துகிறது.

விலை ரூ. 1—8—0

வெளியீடு : பிரேமா பிரசுரம், சென்னை-24.

கிடைக்கப் பெற்றோம் :

பாரதியார் கவிதைகள்

(திருந்திய அழகிய பதிப்பு.) தமிழர் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டிய புத்தகம்.

விலை ரூ. 5—0—0.

கிடைக்குமிடம் :

முத்து நூலகம்,
8 ஜி. பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை—5.

முத்துப் பல்லக்கு ...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

கடந்துபோன ஒரு சம்பவம் திரைப்படக் காட்சி போல அவன் கண் முன்னல் உருண்டு கொண்டிருந்தது.

"கலைவாணரே! கால் வலிக்க வலிக்க உங்களை வந்து தரிசித்தேன், கருணை துள்ளும் நெஞ்சம் கலை படைக்கும் மனிதர்களுக்கு என்பார்களே, அது உங்களைப் பொருத்த அளவில் பொய்தானு?"

"குமாரி, போய்விடம்மா இங்கிருந்து, அழகு அழகோடு மோதினல்...!"

"ஏன் முடித்து விட்டீர்கள்; தொடருங்கள்!"

"தொடர்ந்தால் பிறகு அம்பிகாபதி கதைதான்!"

"குலோத்துங்கன் அல்லவே என் தந்தை!"

"உன் குலத்தை சுட்டதடா என் நாவிற் சொல்!' என்று அம்பு தொடுக்க என் தந்தையும் கம்பனல்லவே!"

"காலம் போய்க் கொண்டே இருக்கிறது!"

"நீ இங்கு வரவில்லை யென்றல் இந்த நேரத்திற்குள், அதோ அந்த சித்திரப்பாவைக்கு விழி கொடுத்திருப்பேன்!"

"சிலைக்கு விழி தர முடிகிறது உங்களால்; ஆனல், நடமாடும் பெருங்கலைக்கு வாழ்வளிக்க மனமில்லை, அப்படித்தானே!"

"வாழ்வளிப்பதாக வாக்குறுதி கொடுத்து விட்டேனே!"

"எப்போது சொன்னீர்கள்; என்னை ஏற்றுக் கொண்டேன் என்று யாரிடம் சொன்னீர்கள், மீண்டும் ஒரு முறை சொல்லுங்கள்...அத்தான்...!"

"அவசரப்பட்டு விட்டாய்; அப்படி ஒருவள் என்னை அழைப்பதற்கு முந்திக் கொண்டாள்...

"அப்படியென்றல்...!"

"ஒருவனை ஒருத்திதான் அப்படி அழைக்க உரிமை பெற்றவள் என்கிறது நான் கற்ற தமிழ்!"

"என் மனக்கோட்டைகள்!"

"என் சம்மதம் என்ற அஸ்திவாரம் இல்லாமலேயே எழுப்பி விட்டாய்!"

"அத்தனையும் சுக்கு நூறுதானு? இனி என் வாழ்வு சூன்ய வெளிதானு சிலை வடிக்கும் கலைஞனே, சிறகொடிந்த பறவைதானு நான்!" அரச குமாரியின் கண்களில் நீர் சாரை சாரையாக வழிந்து கொண்டிருந்தது. வாணனின் நெஞ்சத்திலே அன்று ஏற்பட்ட புயல்...!

★

அன்ருெருநாள் பட்டத்து இளவரசி, மன்னன் மணிமாறனின் குலக் கொடி தன் காதல் பிச்சைக்காக கரம் ஏந்தி நின்ற அந்தக் காட்சி!

அவன் உள்ளத்தின் அடித்தளத்திலே இருந்து ஒரு பெருமூச்சு வெளி வந்தது.

என் மனப் பல்லக்கை இவள் சொத்தாக்கினேன். இந்த மயக்கு மொழியாளோ மன்னனின் முத்துப் பல்லக்கில் சுகம் காணத் துடிக்கிருள்! அவன் வாய் முணுமுணுத்தது.

இவ்வளவு சிந்தனைகளும் அந்த சில நிமிடங்களில் மின்னற் கீற்று போல் அவன் மனத் திரையில் தோன்றி மறைந்தன.

வாணன் வேகமாக சித்திரக் கூடத்திற்குவந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அருகிலே இருந்த அந்தப் பெரிய சம்மட்டி; இரு கரங்களாலும் சேர்த்து எடுத்தான். தலைக்குமேல் உயர்த்தினன்; அந்த ஒரு விநாடி! "அத்தான்!" பெண்மையின் சோகம் பயங்கரக் குரலாக உருவெடுத்து அந்த சித்திரக் கூடத்து நெடுஞ் சுவர்களில் மோதி எதிரொலித்தது. அந்த அழகுச் சிலை தூள்தூளாக சிதறி தரையிலே புரண்டு விழுந்தது!

புயலைவிட அமைதி சில நேரங்களில் பயங்கரமாக இருக்கும் என்பார்கள். அவ்வளவும் உண்மை தான்!

"அழகு! இந்த உலகத்தை விட்டே அழிந்து போகட்டும்! நான் சமைத்த இந்த கலை! நான் படைத்த இந்த அழகு! நான் சிருஷ்டித்த இந்த ஜீவ ஓவியம்! அழிந்து போகட்டும்! என் கையாலேயே அழிந்து போகட்டும்" வெறிபிடித்தவன் போலக் கூவினன் வாணன்! பயங்கரமாக சிரித்தபடியே அங்கிருந்து வேகமாக-தெருவழியே ஓடினன்!

அன்று மைவிழி; கசிந்து கண்ணீர் மல்க அவளிடம் காதல் பிச்சை கேட்டபோது புறக்கணித்தவன்; இன்று அவளிடமே சென்று தன்னை ஏற்றுக் கொள்ள மன்ருடினன்.

பூனை சில சமயங்களில் புலியாகும் என்பார்கள்; அன்று மைவிழி அப்படி புலியாக மாறித்தான் சீறினள்!

"போய் விடு இங்கிருந்து, கலை சொட்டும் கற் சிலைகள் ஏதாவதிருந்தால் கட்டிப்புரளு! போ! என் ஆசைக் கோட்டைகளைத் தவிடு பொடியாக்கி,என் உணர்ச்சிகளை சாகடித்து விட்ட மாபாவி! போய்விடு இங்கிருந்து. நான் என்ருே அழிந்து விட்டேன்; என் இளமை ஆசைகள்—கருகி விட்டன; என் இன்ப நினைவுகள் வெந்து சாம்பல் மேடாகிவிட்டது! பாவி! என்னைப் பிரேதப் பெண்ணுக்கி விட்ட படுமோசக்காரா! இனியும் இங்கு நிற்காதே!" எரிந்து விழுந்தாள், இதயக்குமுறல்களை சொற்களாக்கி வீசினள்.

தொண்டைக் குழிகள் கம்மிப் போகின்ற அளவிற்கு, கூவினள், அத்தான், அத்தான்! என்று அலறினள், அம்பு பட்ட மயில்போலத் துடித்தாள் பொன்னி!

அவள் கூக்குரல், உலகத்தையே தன் காலடியில் மிதித்துக் கொண்டு நடந்த அந்தக் கலைஞனின் செவிகளைத்தொடவேஇல்லை.

மறுநாள் காலை!

மண்ணைக் கட்டி முத்தமிட்ட கீழ்வானத்தின் உதடுகள் சிவந்து விட்டன;

மணிமாறனின் முத்துப்பல்லக்கு, பொன்னியின் வாழ்வை பாழ்படுத்திய அந்த ராஜத்தொட்டில்; வீட்டு வாயிலிலே தெருக் கம்பத்தை அணைத்தபடி நின்று கொண்டிருந்த பொன்னியின் கண்களுக்கு சவத் தொட்டிலாகத் தோற்றமளித்தது!

"மன்னன் மகளுக்கும் இடமில்லா என் மனப்பல்லக்கில் உனக்கு இடமளித்தேன். என்னையே உன் சொத்தாக்கினேன்; சூன்யக்காரி, நீயோ, முத்துப் பல்லக்கிலே சுகம் தேட ஓடினுய்! அழு! அவதிப்படு! அணு அணுவாகச் செத்துப்போ!" யாரோ அவள் செவிகளில் இப்படி பயங்கரக் கூச்சல் போடுவதுபோலஉணர்ந்தாள்!

பனி மூட்டம் படர்ந்திருக்கும் மலை முகட்டிலிருந்து, அந்தப் பரிதாபத்துக் குரியவள் தலை கீழாகப் புரண்டு கொண்டிருந்தாள்.

அய்யோ பாவம்! அவள் வாழ்வை மூளியாக்கி விட்ட அந்த முத்துப் பல்லக்கை—சுமக்கப் பிறந்த அந்த ஏழை [illegible]கள் ஏலேலோ பாடியபடியே சுமந்து கொண்டு அந்தத் தெரு வழியாக நடந்து கொண்டிருந்தனர். ⁂

பேரோவியம்

★ வாலிபர்; தலைவர்! ★

கிளியோபாட்ரா பிறந்தநாடு; ஆடம்பரச் சகதியிலும், உல்லாசப் புழுதியிலும் உடலைப் புரட்டிக் கொண்ட சுகந்தேடிகள் வாழ்ந்த இடம்!

மேனியை மெருகேற்றிக் கொள்ள குடங் குடமாய் கழுதைப்பாலையும், திடகாத்திரத்தைக் காப்பாற்ற குளம் குளமாய் காய்ச்சிய பசும்பாலையும் உபயோகித்து குளிர் மலர்ச் சோலையிலே தளிர்நிகர் மேனியாரோடு தழுவிக் கிடந்தவர்கள் உலவிய இடம்!

அங்கேதான் மக்களைப் பற்றி நினைப்பதற்கென ஒருவர் பிறந்தார்!

அராஜகம் அவர் எதிரி! தென்றலில் மேனியைக் காட்டி, அன்றலர்ந்த ரோஜா போல் உப்பரிகையிலே வாழும் ஆடம்பரத்தின் ஏக போக சொந்தக்காரர்கள் அவருக்கு புலியின் முன்னே நிற்கும் புள்ளி மான்குட்டிகள்!

தொண்டு அவருக்குத் தேன்! மக்கள்பால் அன்பு அவருக்குத் தென்றல்!

அவர்தான் கமால் அப்துல் நாசர்! அவர்தான் ஒரு காலத்தில் எழிலரசிகளின் இருப்பிடமாயிருந்த எகிப்து நாட்டின் தலைவர்!

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் நாட்டை எதிர்த்து அமைக்கப்பட்ட போர்முனையிலே ஒரு குரல் கேட்டது!

''நாம் படைகளை மோதவேண்டிய இடம் இதுவல்ல; அது கெய்ரோ! கெய்ரோவில் குடியிருப்போரைத்தான் நாம் அடித்துத் துரத்தியாக வேண்டும்''

— ஆமாம்; அந்தக் குரல் ஒலித்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கெய்ரோவிலே படைகள் குவிந்தன!

ஆலமரம்போல் பரந்து விரிந்து கிடந்த அரண்மனையைத் திடீரென்று இராணுவ வீரர்கள் சுற்றி வளைத்துக்கொண்டார்கள்!

மதுவும் மங்கையரும் நிறைந்த இடத்தை பொது மக்களின் நண்பர்கள் கவர்ந்து கொண்டார்கள்!

அதன் விளைவாக ஊதாரித்தனத்தின் உறைவிடமாம் பரூக் மன்னன் நாடு துறந்து, பிறந்த நாட்டை விட்டே ஓடினான்!

அந்தப் புரட்சியின் தலைவர் நகீப் என்று அப்போதெல்லாம் அறிவிக்கப் பட்டது!

நகீப் அல்ல அந்தப் புரட்சிக்கு வித்து! நாசர் — அவர்தான் எகிப்து நாட்டு லெனின்! அந்தக் கமால் அப்துல் நாசர்தான் பிரமிட் கோபுரங்கள் நிறைந்த எகிப்தின் கமால்பாட்சா!

தலைவர் என்று அறிவிக்க ஒரு வயதானவர் தேவைப் பட்டார்! ஏனெனில் பெரியவர் ஒருவர் இருந்தால்தானே பாமரர்களிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்!

ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த ராஜ வம்சத்துக்கு சமாதி எழுப்புகிறார்கள்; தலைமுறை தலைமுறையாக நடமாடுகின்ற தெய்வாதீனம் பொருந்திய மணி முடிக்குச் சாவுமணி அடிக்கிறார்கள்!

—அந்த மாபெரும் காரியத்தை முப்பத்தி எட்டே வயதுடைய நாசர் செய்வதாகச் சொன்னால், புரட்சியாம்! புரட்சி! எல்லாம் சிறுபிள்ளை விளையாட்டு! —என்று வக்கணை பேச வாய்வீச்சாளர்கள் கிளம்பி விடுவார்கள் அல்லவா?

எனவேதான் வயதானவர், பெரியவர் என்ற முறையிலே நகீப்பிற்கு தலைவர் நாற்காலியைக் கொடுத்தார் நாசர்!

ஆனால் அந்தப் பெரியவர் நகீபோ அதிகாரம் கைக்கு வந்ததும், யாரும் எட்டிப்பிடிக்க முடியாத தூரத்துக்குப் பறந்துவிடப் பார்த்தார்!

அவரைப் பிடித்து நிறுத்தி, வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள் எகிப்து நாட்டு இளைஞர்கள்!

முதுபெரும் கிழவரிடமிருந்து லகானை வாங்கிக் கொண்டு எகிப்து நாட்டு அரசியற் தேரை ஜனநாயகப் பாதையிலே செலுத்தப் போகும் சாரதியாகி விட்டார், முப்பத்தி எட்டே வயது நிரம்பப் பெற்ற நாசர்!

''நாசர் இல்லாவிடில் எகிப்து நாடே நாசமாகி யிருக்கும்!?'' —ஆங்கில நாட்டு அரசியல் விற்பன்னர் ஒருவர் இப்படிக் கூறுகிறார்!

''திட்டமிடுவதில் அவர் ஒரு வல்லவர்''—அமெரிக்க நாட்டு முன்னாள் தூதுவர் ஒருவரின் கருத்து இது!

''நான் என்னை ஒரு சர்வாதிகாரி என்று நினைக்கவில்லை. அதற்கேற்ற குணங்கள் எனக்குக கிடையாது. காரணம் நான் எல்லோரையும் போல ஈவு இரக்கம் கொண்டவன்.''—இது நாசர் தன்னைப்பற்றிக் கூறிக் கொள்ளும் கருத்து!

இவற்றை யெல்லாம் விட, அவரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் பல இருக்கின்றன.

அவர் ஒரு விடுதலை விரும்பி! எனவேதான் புரட்சிக்காரர்களின் கையில் ஆட்சி வந்தவுடன் சூயஸ் கணவாயை விட்டு வெள்ளையர்கள் வெளியேற்றப் பட்டு விட்டார்கள்!

அவர் ஒரு ஏகாதிபத்ய எதிர்ப்பாளர் — எனவேதான் எகிப்து நாட்டில் வளம் பெருக்கும் பல திட்டங்களுக்குஅமெரிக்காஉதவி செய்ய மறுத்தும், அவர் சிறிதும் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை!

'உனக்கு ஆயுதங்கள் தரமுடியாது' — என்று வெள்ளையர்கள் மிரட்டினார்கள் — ''பரவாயில்லை; நான் ரஷ்யர்களிடமிருந்து அந்த ஆயுதங்களைப் பெற்றுக்கொள்கிறேன்''—என்று பதில் சொல்லி விட்டார், இவர்!

அவர் ஒரு இலட்சியக் காளை; சாவுக்கும் அஞ்சாத கர்மவீரர்! எனவேதான் அலெக்சாண்டிரியா நகரிலே மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் அவர் பேசிக்கொண்டிருந்தபோது, வெறியன் ஒருவன் அவருக்குக் குறிவைத்து துப்பாக்கியால் சுட்டான்!

அப்போதும் நாசர் அஞ்சி நடுங்கவில்லை. மார்பைத் திறந்து காட்டும் பான்மையில், ''என்னுடைய வாழ்க்கை உங்களுக்குச் சொந்தம்; எனது இரத்தம் உங்களுடைய உடமை—உங்களுக்குத் தேவையெனில் சொல்லிவிடுங்கள்; நானே அவைகளைத் தந்துவிடுகிறேன்'' —என்றுமுழக்கமிட்டார், நாசர்!

இதற்குப் பிறகு துப்பாக்கி வேட்டுகளா அதிரும்? கரகோஷம் தான் வானதிர முழங்கிற்று!

சில வாரங்களுக்கு முன்பு — சூயஸ் கணவாயை விட்டு கடைசி வெள்ளைக்காரச் சிப்பாய் வெளியேறிய பிறகு—நாடெங்கும் தேர்தல் நடைபெற்றது.

'நான் ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கிறேன். நீங்கள் என்னை விரும்புகிறீர்களா?' என்று நாட்டவர்களைப் பார்த்துக் கேட்டார், அவர்!

'நெருப்பின் பொறியே! எமக்கு நீங்கள்தான் தேவை!'என்று அவரைநோக்கி கூக்குரல் எழுப்பினர்!

99·9 சதவீத ஓட்டுகள் நாசருக்கு விழுந்தன.

அதன் விளைவு முப்பத்தி எட்டு வயது நிரம்பிய அரும்பு மீசைக்காரர் 174 லட்சம் மக்கட் தொகை கொண்ட எகிப்து நாட்டின் ஜனாதிபதியானார்!

அந்த வாலிபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் மகத்தான பொறுப்புகள் வெற்றிபெற தென்னகத்து வாலிபப் பட்டாளமாம்— 'ராயபுரத்துச் சிறுவர்கள்' நடத்தும் இயக்கம் என்று கூறப்படும் நாமும் வாழ்த்துக் கூறுகிறோம்!

174 லட்சம் மக்கட்குரலோடு தென்னகத்தின் கோடிக் கணக்கான குரல்களும் சேர்ந்து வாழ்த்து ஒலிக்கட்டும்!

★

நாசர்

★ எது தேவை? ★

1935-ம் ஆண்டிலே, ஆண்டிரு மராய் என்ற பிரபல பிரெஞ்சு நாட்டு எழுத்தாளரை வின்ஸ்டன் சர்ச்சில் பார்க்க நேர்ந்தது. அப்போது சர்ச்சில் அவரை நோக்கி:

''நண்பர் மராய்! நீங்கள் இனிமேல் பொழுது போக்குவதற்கு மட்டுமே பயன்படும் நாவல்களை எழுதக் கூடாது. சிறுகதைகள் தேவையில்லை. கவிதைகள் வேண்டாம். தினம்தினம் ஒரு கட்டுரை எழுதுங்கள். ஒரே விஷயத்தைப் பற்றி, வெவ்வேறு அலங்கார வார்த்தைகளை உபயோகித்து எழுதுங்கள். நல்ல நிலைமையில் இருந்துவந்த உங்கள் பிரெஞ்சு நாட்டு விமானப் படை இப்போது நான்காவது அல்லது ஐந்தாவது ஸ்தானத்துக்கு நழுவிக்கொண்டிருக்கிறது. விமானப் படையே வைத்திருக்காத ஜெர்மன் நாட்டு விமானப் படையோ உலகிலேயே முதல் ஸ்தானத்தைப் பெற்றுவருகிறது. இந்த உண்மையை உங்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். காதல் கதைகளை எழுதுவதை விட இது மிக்க பலனை அளிக்கும்''

பின் உலகப் போரிலே ஜெர்மன் படையினால் பிரான்ஸ் நாடு பலத்த சேதத்துக்கு ஆளானது. அப்போது மராய் ''சர்ச்சில் சொன்னபடி நான் கட்டுரை தீட்டாமற் போனேனே!''—என்று சொல்லிச் சொல்லி மிகவும் வருத்தப்பட்டார்.

சர்ச்சிலின் உபதேசமும், மராயின் வருத்தமும் நாட்டுக்குத் தேவையான எழுத்தோவியங்கள் எவை—என்பதைக் காட்டுகின்றன.

ஐயாயிரம் ரூபாய் பரிசு !

ரூபாய் ஐயாயிரம்—சுளை சுளையாய் ஐயாயிரம்! இப்போதே பெற்றுக் கொள்ளலாம்! குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடை கண்டோ, அல்லது லாட்டரி சீட்டிலே வெற்றி பெறுவதன் மூலமோ அல்ல. இந்தப் படத்தில் இருக்கிறாரே—இவரைக் கண்டு பிடித்து போலீஸ் வசம் ஒப்புவித்தால் அந்தக் கணமே போய் ஐயாயிரம் உங்கள் வசமாகும்.

யார் அந்த மனிதர்? மான்சிங்—என்றெல்லாம் சொல்கிறார்களே அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவரா? அல்லது கொலைகள் பல செய்தவரா? இரண்டும் இல்லை!

மாயா மந்திரங்கள் பல புரிந்து, அதன் மூலம் இரும்புப் பெட்டிக்குள் முடங்கிக் கிடக்கும் பணத்தையெல்லாம் தன் மடிக்குள் சுருட்டிக்கொண்ட மாபாவியுமல்ல — அவர்களெல்லாம்தான் சுதந்தர புருஷர்களாக சுற்றிக் கொண்டிருக்கிறார்களே!

பின் யார்தான் அவர்? அவர் செய்த குற்றம்தான் என்ன?

சொன்னால் நம்பமுடியாது—அப்படி ஒரு விசித்திரமான குற்றத்தைப் புரிந்திருக்கிறார். இந்த 'வேடிக்கை மனிதர்!'

விடுதலை கேட்டார்! தன் இனமான நாகர்களுக்கு தனி நாடு வேண்டுமென்று கேட்டார்.

—இதுதான் இவர் புரிந்த மாபெரும் குற்றம். அதனால்தான் சுதந்தர பாரத அரசாங்கத்தில் அவரது தலைக்கு ரூபாய் ஐயாயிரம் பரிசு வைக்கப்பட்டிருக்கிறது!

பிசோ—என்று சொல்லப்படுகிற நாகர் தலைவர் இவர்தானாம்!

விக்டர் ஹியூகோ எழுதிய 'இளிச்சவாயன்' நாவல் கதாநாயகன் போல் இருக்கிறாரே; இவரா நாடு கேட்கிறார்—என்று சொல்லத் தோன்றுகிறதா?

அப்படி ஒன்றும் நினைத்துவிட வேண்டாம். போலீசாரை ஏமாற்றுவதற்காக அவர் வாயைக் கோணிக் கொண்டு போட்டோவுக்கு முகத்தைக் காட்டியிருக்கிறாராம். மற்றபடி அவருக்கு எல்லோருக்குமுள்ள முகத்தைப் போலத்தான்! பாவம்; ஏமாந்து விட்டார்கள். போலீஸ் அதிகாரிகள்!

ஆனால் ஒன்று—இந்த ஐயாயிர ரூபாயை யாராலும் பெற முடியாது. காரணம் படத்திலிருக்கும் இந்த மனிதரை அவ்வளவு சுலபத்தில் யாரும் பிடிக்க முடியாது.

மலையும் காடும் சூழ்ந்த அந்த நாகமலைப் பிரதேசத்திலே இவரும், இவரைச் சேர்ந்த விடுதலை வீரர்களும் காற்றைப் போல யார் கண்ணிலும் அகப்படாமல் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாக இனத்தைச் சேர்ந்த கடைசி மனிதனின் இருதயத்தில் கடைசித் துடிப்பு இருக்கும் வரையில் எங்கள் உரிமைப் போராட்டம் நடந்தபடிதான் இருக்கும்—என்று விண்ணதிரக் கர்ஜனை புரிகிறார்கள்!

இன்று நேற்றையிலிருந்தல்ல; பல ஆண்டுகளாக இவர்களது விடுதலைப் போராட்டம் நடைபெற்று வருகிறது. ஆனால் சமீபத்தில்தான் இவர்கள் ஆயுதத்தின் உதவியை நாட ஆரம்பித்தார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பண்டித நேருவும், பர்மா பிரதமர் யூ—நூவும் இரண்டு நாடுகளின் எல்லைப் புறங்களிலே வசிக்கும் நாகர் நாட்டிலே சுற்றுப் பிரயாணம் செய்தார்கள் அல்லவா?

அப்போது பண்டிதருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்க வேண்டுமென்று சில நாகர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாடினார்கள்.

பண்டித நேரு பேச எழுந்தது தான் தாமதம்—

எதிரே அமர்ந்திருந்த அத்தனை நாகர்களும் எழுந்தார்கள்; பண்டிதரின் முகத்தைத் திரும்பியும் பார்க்காமல் வெளியேறிவிட்டார்கள், கூட்டத்தை விட்டு!

பாதுகாப்புக்கு வந்த போலீஸ் அதிகாரிகள்; அரசாங்க அலுவலாளர்கள்—இவர்களைத் தவிர பண்டிதரின் பேச்சைக் கேட்பதற்கு அங்கே ஆள் இல்லாமற் போய்விட்டது!

நாகநாட்டுக் கோரிக்கை பற்றிக் குறிப்பிட்டிருந்த வரவேற்புப்

'காதித் திரை'க்குள்ளே காட்டு மிராண்டிச் செயல்!

அதிகாரிகள் அந்த வரவேற்பிதழைப் படித்துப் பார்த்து, இதில் தனி நாகநாடு தரப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது, இதை நாங்கள் பிரதமரின் எதிரே படிக்க அனுமதிக்கமாட்டோம்! —என்று கூறி மறுத்துவிட்டார்களாம்.

இதன் பிறகு பண்டிதரும், பர்மா பிரதமரும், வரவேற்புப்பா படித்துத் தரப்படுவதாக இருந்த அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். ஆசியாவின் ஜோதி, அகிலத்துக்கெல்லாம் பஞ்சசில நீதி வழங்கிய அந்தப் பரஞ்ஜோதி பாவை பண்டிதரின் எதிரில் படிக்கக்கூடாதென்று தடை விதித்தார்கள்; அதன் பலனையும் அனுபவித்தார்கள், அந்த அதிகாரிகள்!

அப்படியெல்லாம் காந்திய முறையிலே தங்கள் விடுதலைக் கிளர்ச்சியை நடத்தி வந்த நாகர்கள், பின் எந்தக் காரணத்தினால் பலாத்காரத்தில் நம்பிக்கை பெற்றார்கள்?

இவர்கள் அஹிம்சாவாதிகள் அல்ல என்றாலும், எந்தச் சூழ்நிலை இவர்களை ஆயுதமேந்தச்செய்தது-என்பது இன்னும் யாருக்குமே தெரியவில்லை.

காரணம், அந்த நாக மலைப் பிரதேசத்துக்குள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அல்லாத எவருமே பல ஆண்டுகளாக இந்திய அரசினரால் அனுமதிக்கப்படவில்லையாம். குறிப்பாக பத்திரிகை நிருபர்கள் எந்தக் காரணம் கொண்டும் அங்கே நுழைய முடிவதில்லை;

ரஷ்யாவிலே இரும்புத் திரை இருப்பதாக கேலி பேசியவர்கள் நாகநாட்டைச் சுற்றி 'காதித்திரை' எழுப்பியிருக்கிறார்கள்!

அந்தக் 'காதித்திரை'க் குள்ளேதான் இப்போது புகைச்சல் கிளம்பி வெளி உலகத்தின் கவனத்தைக் கவருகிறது.

மலாய் நாட்டிலே ஜெனரல் டெம்ப்ளர் என்னும் கொடுங்கோலர் கம்யூனிஸ்ட்களை அடக்குவதற்கென உபயோகித்த காட்டு மிராண்டிச் செயல்கள் பலருக்கு நினைவிருக்கும்.

துப்பாக்கி வைத்திருப்பதாகச் சந்தேகிக்கப் பட்டவர்களெல்லாம் கைது செய்யப்பட்டு, தூக்கிலிடப்பட்டார்கள்.

கம்யூனிஸ்ட்கள் பதுங்கியிருப்பதாகச் சொல்லப்படும் காடுகளுக்கெல்லாம் தீ வைத்தார்கள். தீ வைக்க முடியாத பகுதிகளிலெல்லாம் விமான மூலம் சென்று, குண்டுகளை மழையெனப் பொழிந்தார்கள்! எலிக்கு பயந்துகொண்டு வீட்டுக்கே நெருப்பு வைத்த கோமாளியைப் பற்றி கதை சொல்வார்களே; அதை நினைவு படுத்துவதைப் போலத்தான் வெள்ளையர்களும் கோமாளித்தனமாக நடந்து கொண்டார்கள்.

அதே கோமாளித் தனத்தை அடிப்படையாகக் கொண்ட காட்டு மிராண்டித் தனம்தான் இப்போது இந்திய அரசினரால் நாகர் மலைத் தொடரிலே செயலாக்கப்படுகிறது,

நாகர்கள் வாழும் கிராமங்கள் அஸ்ஸாம் இராணுவத்தினரால் தீ வைக்கப்படுகின்றனவாம். கண்ணில் பட்டவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளுகிறார்களாம்.

—'காதித் திரை'க்குள்ளே இவ்வளவு கொடுமைகளும் நடைபெற்று வருகின்றன.

எதிரிகளை வென்றே தீருவோம் என்று கவிதை வரிகள் மூலம் கர்ஜனை புரிந்த போது ஷெல்லி காரணம் காட்டினான்.—

அவர்கள் சிலர்; நாம் பலர்

—என்று!

ஆனால் நாகர்களைப் பொறுத்த வரையில் இது உண்மையல்ல.

அவர்கள் (இந்திய இராணுவத்தினர்) பலர்; நாம் சிலர்—என்று தான் பிசோ கூற முடியும்,

ஆனால் பண்டிதரும், அவர்தம் பட்டாள வீரர்களும் மனதில் கை வைத்துச் சொல்ல வெட்கப்படும் அளவுக்கு பிசோ மார்தட்டிக் கூறமுடியும்.

அவர்களிடம் பொய்மை இருக்கிறது; ஆனால் நம்மிடம் வாய்மை இருக்கிறது; நீதி இருக்கிறது—என்று!

காரணம் வாய்மையும் நீதியும் தோற்றதாக மனிதகுல வரலாற்றிலே சான்று கிடையாது. கேவலம், பாட்டி சொல்லும் கட்டுக் கதைகளில்கூட அவைதான் ஜெயித்திருக்கின்றன, பாட்டி மனப்பான்மை கொண்டிருக்கும் பண்டிதரின் திருக்கூட்டம் இதை உணர்ந்து கொள்ளட்டும்!

—மா.

உயர்ந்து வா!

"என்னிடம் கையெழுத்து கேட்காதே! உன்னிடம் கேட்கும்படியாக உயர்ந்து வா!"

விசித்திரமான வாசகங்கள்! ஆனால் அவைகளினூடே பொதிந்து கிடக்கும் மாபெரும் உண்மை—சோம்பிக்கிடக்கும் உள்ளுணர்வை தட்டி எழுப்பும் மகத்தான தன்மை—அப்பப்பா! எத்தனை கருத்துள்ள சொற்கோர்வைகள்!

யாரோ ஒரு அறிஞர் சொன்னாராம், 'உலகிலே பலர் வாழ்வதற்காக சாப்பிடுகிறார்கள்; ஆனால் சிலரோ சாப்பிடுவதற்காகவே வாழ்கிறார்கள்' என்று. அப்படியிருக்கையில், 'நான் யார்? என் திறமை என்ன? என்னால் சாதிக்க முடிந்தவை எவை எவை?' என்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு, வாழ்க்கையிலே முன்னேறு, முன்னேறு—என்று எடுத்துச் சொல்லும் அந்த அர்த்தமுள்ள வார்த்தைகளை பல முறைப் படித்து விட்டான் பரிதாபத்துக்குரிய முத்து.

அழுக்கடைந்து தோன்றிய அவனுடைய 'ஆட்டோ கிராப்' புத்தகத்தில், கிழிந்தும் கிழியாமலுமிருந்த ஒரு ஏட்டில், மறைந்தும் மறையாமலுமிருந்த அந்த எழுத்துக்களில்தான் அவனுக்கு எத்தனை பற்று—பாசம்!

விளையாட்டிலும் ஏதேனும் பலன் இருக்க வேண்டுமல்லவா? ஆகவேதான் முத்து பெரிய மனிதர்களிடம் கையெழுத்து வாங்கும் நல்ல விளையாட்டைத் தேர்ந்தெடுத்தான்.

'ஆட்டோகிராப்' புத்தகம் வாங்க நாலணா தேவை என்ற நேரத்தில் அவன்பட்ட அல்லல்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவனுக்கென்ன பெற்றவர்களா இருக்கிறார்கள், 'ஐயோ! கண்மணி கண் கலங்குகிறானே' என்று அம்மா நாலணாவுக்குப் பதில் எட்டணாவைத் தர—அன்பு மகனுக்கு ஆவன செய்திட அப்பா துடித்து வர! பைத்தியக்காரன், வேண்டாத எண்ணம் அது என்று அவன் உணரவில்லை; ஆசையும் விடவில்லை. ஓடினான், முதலாளி என்ற பெயரிலே அவனை ஆட்டிப் படைக்கும் இதயமில்லா முரடனிடம். அவர் சீறினார். மாடு போல் உழைக்க வேண்டும், போட்டதை உண்ண வேண்டும், மாட்டுக் கொட்டகை இருக்கிறது உறங்குவதற்கு—இப்படித்தான் முத்துவை அவர் கணக்கிட்டிருந்தார். தேவைக்கு சில்லறையும் கேட்பான் என்று அவர் நினைக்கவே இல்லை. முத்து அழுதான். முதலாளியின் மனம் இளகியது, பல முறை, பலவிதம் திட்டிய பிறகு...நாலணா தானே!

மறுநாள் அவனது கையிலே கம்பீரமாக உட்கார்ந்துகொண்டிருந்தது ஒரு 'ஆட்டோகிராப்' புத்தகம்!

ஊருக்கு ஒரு பெரிய—புதிய மனிதர் வந்துவிட்டால் போதும்; அவர் புகைவண்டி நிலையத்தில் இறங்கும் போதே, அவரை முதன் முதலாக வரவேற்க வருவது அந்த 'அட்டோகிராப்' புத்தகம்தான். சிலர் உடனே கையெழுத்துப் போடுவர்; சிலர் 'செக்' புத்தகத்தில் கையெழுத்திடுவதைப்போல முகத்தை சுளுக்கிக் கொண்டு போடுவர். எப்படிப் போட்டால் என்ன? முத்துவுக்கு பரம திருப்தி!

★

அப்படித்தான் அன்றொரு நாள்...

ஊரிலே ஏதோ பொதுக் கூட்டமாம்; திருவிழா போல ஜனத்திரள்!

முத்து கூட்டத்திற்குப் போய்த்தான் தீரவேண்டும். கூட்டம் கேட்பதற்காக அல்ல; அதற்கு அவனுக்கு நேரம் கிடைக்காது. பேச வருபவரிடம் கையெழுத்து வாங்கிவிட்டால் போதுமல்லவா! பேச வருபவரும் பெரிய மேதையாம்.

தலைக்கு மேலே உயர்ந்துநின்று 'எங்கே போகிறாய்? விடுவேனா உன்னை!' என்று பயமுறுத்துயது அன்றாட வேலைகள். தவித்தான முத்து. வேலையில் தவறினால் விழிகள் குளமாகும்; வீங்கிவிடும் முதுகு! அவன் உணர்ந்துதான் இருந்தான். ஆனாலும்...

தூரத்தே அமைக்கப் பட்டிருந்த 'ஒலிபெருக்கி'யிலிருந்து அந்தப் புதியவருடைய கம்பீரமான குரல் எழுந்தது. அப்பப்பா! கணீர் கணீர் என்ற அந்தக் குரல் கொட்டும் கருத்துக்கள்தான் எத்தனை!

முத்துவால் அதற்குமேல் தாங்க முடியவில்லை; பொறுமை இழந்தான். ஓடினான். கூட்டத்தில் இடிபட்டு, அடிபட்டு மேடைக்கே போய்விட்டான். பேச்சு முடிந்தது. மேடைக்குத் தாவினான் முத்து. பக்கத்தில் நின்றோர் வசைபாட, பேசியவர் அவனைப் பார்த்தார். அவனது ஆர்வத்தைக் கண்டு வியந்திருக்கத்தான் வேண்டும்; இல்லையேல் அவரது கண்கள் அகல விரிவானேன்!

முத்து 'ஆட்டோகிராப்' புத்தகத்தை அவசர அவசரமாக நீட்டினான். அவர் எதுவோ எழுதினார். அதற்குள் கூட்டம் மேடைக்குத் தாவ நிலை இக்கட்டாக மாறியது. முத்து புத்தகத்தை வாங்கிக்கொண்டு வெளியே ஓடிவந்தான். மினுக் மினுக்கென்று எரிந்துகொண்டிருந்த தெரு விளக்கடியை நோக்கி ஓடினான்; நின்றான்; விரித்தான்; படித்தான்:

"என்னிடம் கையெழுத்து கேட்காதே! உன்னிடம் கேட்கும்படியாக உயர்ந்து வா!"

அந்த வாசகங்கள்!...முத்து படித்தான்; திரும்பத் திரும்ப படித்தான். அவனது மூளையே குழம்பிவிட்டது.

★

அன்று இரவு! தெரு நாய்கள் ஊளையிட்டன; சுவர்க் கோழிகள் நிம்மதியின்றி அலறிக் கொண்டிருந்தன.

கூட்டம் நடந்த இடத்தருகே நின்றுகொண்டிருந்த அதே விளக்கடியில் சாய்ந்து கிடந்தான் முத்து! பாவம்; அவனது விழிகள் குளமாகியிருந்தன; முதுகு மட்டுமல்ல; அழுது அழுது அவனது முகம்கூட வீங்கியிருந்தது! ஆமாம்; எதிர்பார்த்த பலன் கிடைத்தே விட்டது. அவனது கையிலே குலைந்துபோன உருவத்தோடு புதைந்து கிடந்த 'ஆட்டோகிராப்' புத்தகம், 'பாருங்கள் என்னை! முத்துவின் முதலாளி அவனிடம் தன் பலத்தைக் காட்டியது மட்டுமல்ல; என்னையும்கூட சித்திரவதை செய்து விட்டார்!' என்று சொல்லிக்கொண்டிருந்தது!

கூட்டம் முடிந்ததும் முத்து வீட்டுக்கு ஓடினான். கையிலே கம்புடன் காத்திருப்பார் முதலாளி; அவனுக்குத் தெரியும்—இருந்தாலும் அவன் மனதிலே எல்லையற்ற இன்பம்! ஆயிரம் ஆயிரமாகப் பணம் கிடைத்திருந்தாலும்—அடை அணிகலன்கள் தரப்பட்டிருந்தாலும்கூட அவனுக்கு அந்த இன்பம் கிடைத்திருக்காது. ஆனால்...அந்தப் பொன்மொழிகள்—அவனுக்கு கிடைத்தற்கரிய மாபெரும் செல்வமாகத் தோன்றிவிட்டது!

பாயும் புலிபோல—படமெடுத்தாடும் நாகம்போல—அவன் மேல் தாவினார் அந்த மனிதர்! 'வேலை கெட்டுவிட்டது!' என்று குற்றப் பத்திரிகை வாசித்தார் அவர்; தண்டனை தந்தது அவர் கையிலே நின்றுகொண்டிருந்த பிரம்பு!

முத்து அலறினான். உண்மையைச் சொன்னான். புத்தகத்தை நீட்டினான். அவர் வாங்கினார். படித்தார். வெறிபிடித்தவரைப் போல சிரித்தார். "உயர்ந்து வா!...ஓகோ! பெரிய மனிதர் உயர்ந்தவராகப் போகிறாரோ!" என்று சத்தினார். புத்தகத்தைக் கசக்கி வீசி எறிந்தார்.

தன் முகத்திலே பட்டு கீழே விழுந்த அதைக் குனிந்து எடுத்தான் முத்து. அதற்குள், 'இனிமேல் இந்த வீட்டில் நுழையாதே, பிச்சைக்கார நாயே!' என்ற குரலோடு வீட்டின் கதவு 'படார்' என்று சாத்திக் கொண்டது. முத்து விளக்கடிக்கு வந்தான்!

அன்று மட்டுமல்ல; அன்று முதல் முத்து அந்த விளக்கடிவாசியாகி விட்டான். அனாதையாக உலகத்தின் அகண்ட கரத்திலே உருண்டு கொண்டு வந்த அவனது ஒரே சொத்து அந்தப் பொன்மொழிகள் தான்!

அதைப் படிப்பான்; திருப்பித் திருப்பிப் படிப்பான்! அந்தகாரம் சூழ்ந்த அதள பாதாளத்தில் உருட்டித் தள்ளப்பட்ட அந்த அனாதையை—ஒரே ஒரு அன்புக் கரம் மட்டும் எங்கேயோ இருந்து 'உயர்ந்து வா! உயர்ந்து வா!!' என்று அழைத்தது!

அந்த அன்பு மொழிகளுக்குப் பின்னே... தம்பீ! நீ எதற்கும் அஞ்சாதே! பணமும் பகட்டும் உன்னை எதுவுமே செய்து விடாது! ஆனால் நீதிக்கு மட்டும் நீ பயப்பட்டுத்தான் தீர வேண்டும்!...நேர்மை தவறாது நட; நீ உயர்ந்து விடலாம்! நல்லதே செய்; நல்லவன் என்று பெயர்பெறுவாய்—என்ற அறிவுரைகள் எல்லாம் மறைந்து கிடந்தன.

★

நள்ளிரவு நேரம்—பயங்கரமான இருள்! தெரு விளக்கு அன்று வழக்கத்திற்கு மாறாக மிகவும் ஒளி குறைந்து எரிந்தது.

அந்தக் குறைந்த ஒளியிலும் பல முறை அந்த எழுத்துக்களைப் படித்தமுத்து அப்போதுதான் சற்று கண்ணயர்ந்தான்.

அப்போது...

அங்கே சூழ்ந்து கிடந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு—ஏதோ ஒரு பயங்கரமான அலறல் எழும்பியது!

முத்து திடுக்கிட்டு எழுந்தான். சொறி பிடித்த தெரு நாய் ஒன்று அவன் பக்கத்தில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. அவனுக்கு எதுவுமே புரியவில்லை; ஒரே குழப்பம்!

சற்று நேரத்திற் கெல்லாம் மறுபடியும் அதே சப்தம்—"ஐயோ! ஐயோ!" என்ற பயங்கர ஓலம் எழும்பியது.

முத்துவின் உடல் குப்பென்று வியர்த்தது; வெட வெட என்று நடுங்கியது. அந்த பயங்கர இருளில், அந்த கோரக் குரலைக் கேட்டால் மனோ வலிமை நிறைந்த பெரிய மனிதர்களே தடுமாறத்தான் வேண்டும். பாவம் முத்து, அவன் என்ன செய்வான்? அலறல் வந்த திசைக்கு எதிர் திசையில் வேகமாக ஓட ஆரம்பித்தான். காரிருளில் எதையும் பொருட்படுத்தாது ஓடினான். ரொம்ப தூரம் ஓடி வந்த பிறகுதான் அவன் திடுக்கிட்டு நின்றான். ஆமாம்; அவன் கையில் 'ஆட்டோகிராப்' புத்தகத்தைக் காணோம்! தூங்கும்போது தலைமாட்டில் வைத்துக் கொண்டிருந்தான்; திடீரென்று ஓடி வந்ததில் மறந்து விட்டான்.

இந்த நினைவு முத்துவுக்கு வந்த பின்னும் அவன் காத்திருப்பானா? அல்லது அந்த அவனது செல்வத்தை இழந்துவிடத்தான் அவன் மனம் சம்மதிக்குமா?

எது வரினும் சரி என்றத் துணிவுடன் முத்து திரும்பி விளக்கடியை நோக்கி ஓடினான். ஆனாலும் அவனது பிஞ்சு மனம் என்னவோ பயந்து கொண்டுதான் இருந்தது.

முத்து விளக்கடியை அடைந்தான். ஆனால்...அவன் ஏன் இப்படித் துடிக்கிறான்? அங்கே—விளக்குக் கம்பத்தின் அடியிலே—அவன் வைத்த இடத்திலே—அவனது 'ஆட்டோகிராப்' புத்தகத்தைக் காணோம்! முத்து 'ஐயோ!' என்று அலறிவிட்டான்; விழித்துக்கொண்ட தெரு நாயும் 'ளொள், ளொள்' என்று குரைக்க ஆரம்பித்துவிட்டது.

★ அடுத்த இதழில் முடியும்

—சொர்ணம்.

MURASOLI விலை 0-2-0

திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் வள்ளுவராண்டு 1987, ஆனித் திங்கள், 31-ம் நாள் (14—7–56) சனிக்கிழமை, சென்னை அரண்மனைக் காரத்தெரு, கோகலே மண்டபத்தில், மாலை 5-மணியளவில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் எங்கள் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்குத், தாங்கள் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்:

ஏ. கே. வில்வம் (முரசொலி) — அருண்மொழி பி. ஒ. எல்.

லட்சுமி நாராயணன்;
கோவில்பட்டி.

(?) ஆந்திராவில் ஆண்களே இல்லாத பஞ்சாயத்து போர்டு ஒன்று இருக்கிறதாம். அதைப் போல சென்னை மாநிலத்திலும் ஆண்கள் இன்றி பெண்களினால் அரசாங்கம் இயக்கப்பட்டால்......?

துணிவோடு அவர்கள் தட்சிணப் பிரதேசம் தேவையில்லை — என்று தீர்மானம் செய்வார்கள்; சென்னைக்குத் தமிழ்நாடு என்று நிச்சயம் பெயர் சூட்டுவார்கள்!

எஸ். சாம்பசிவம்; மன்னார்குடி.

(?) வக்கீல்கள் அரசியலில் பங்கு கொள்ள வேண்டுமென்று அனந்தசயனம் அய்யங்கார் வற்புறுத்தக் காரணம் என்ன?

சுப்ரமணியம் போன்ற வக்கீல்களுக்கு உள்ளூரில் சரியானபடி 'கேஸ்' கிடைக்காவிட்டால் வேறு என்னதான் செய்வார்கள்?

கே. பி. அங்கமுத்து;
உப்பிலியப்பன்கோயில்.

(?) சென்னையிலும், சுற்றுப்புறங்களிலும் இப்போது திருட்டு அதிகமாக நடப்பதேன்?

காங்கிரசின் தீவிர அங்கத்தினராவதற்கும், தேர்தல் அட்சாக் கமிட்டியினரின் சிபார்சைப் பெறுவதற்கும் யாராவது நிதி சேர்க்க அந்த வழியைக் கையாளுகிறார்களோ; என்னவோ!

ஓய். வெங்கடேசன்;
அவிசாவெள்ள.

(?) மதுரை கார்ப்பரேஷனாக மாறப் போகிறதாமே; ஏன்?

இந்த மாகாணத்தில் ஊழல் மலிந்த இடம் சென்னை ஒன்றுதான் – என்ற நிலைமையை மாற்றியமைப்பதற்காக!

'தமிழ்ப் பித்தன்'; கோவை.

(?) ஆந்திர — தமிழ் எல்லைப் பிரச்னை என்னவாயிற்று?

காமராசரின் கையாலாகாத் தனத்திற்கு மற்றொரு உதாரணமாயிற்று!

அப்துல் மஜீத்; வாணியம்பாடி.

(?) ஆண்டொன்றுக்கு சுமார் முப்பதுகோடி ரூபாய்கள்வரை வருமான வரி தராமல் பலர் ஏமாற்றிவருவதாக அரசாங்க அறிக்கை கூறுகிறதே; அவர்களெல்லாம் யார்?

காங்கிரஸ் கட்சி தன்னுடைய தேர்தல் அபேட்சகர்கள் பட்டியலை வெளியிடட்டும்; அப்போது சொல்கிறேன் அந்தப் 'பலர்' யாரென்று!

ஜி. ராஜாராம்; திண்டிவனம்.

(?) சமுதாயப் புரட்சி என்றால் என்ன?

ஆலகால விருட்சத்தின் கிளைகளை வெட்டுவதல்ல; அதன் ஆணி வேரையே சாய்ப்பதுதான் சமுதாயப் புரட்சி!

சோமநாதன்; குடந்தை.

(?) காமராசர் ஏன் இப்படிப் பேசத் தொடங்கினார்?

ஊமை ஊரைக் கெடுக்கிறது.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்!

15-7-56 ஞாயிறு மாலை 6-மணிக்கு

டாக்டர் சி. நடேசன் நகரில் (சேப்பாக்கம்) நடைபெறும்

தலைவர்:

எல். கோபால்

படிப்பகத் திறப்பாளர்;

நடிகமணி டி. வி. நாராயணசாமி

பேசுவோர்:

மு. கருணாநிதி

அமுதா

★ 'முரசொலி' வழங்கும் இலக்கியச் செல்வம்! ★

முத்தாரம்

★ நெஞ்சையள்ளும் மூவர்ண முகப்பு —
— கே. மாதவன் தீட்டுகிறார்!

★ கருத்தைக் கவரும் செந்தமிழ்ச் சிறுகதைகள் —
— தமிழகத்தின் எழுத்துலக வேந்தர்கள் எழுதுகிறார்கள்!

★ கவிதெழுதும் சித்திரங்கள் —
— பக்கத்துக்குப் பக்கம் உங்கள் பார்வையைப் பாக்கு வைத்து அழைக்கும்!

★ மேல்நாட்டுக் காவியக் கோபுரத்தின் கலசங்கள் —
— கவர்ச்சி சிறிதும் குலையாத வகையில் காந்தக் கற்களாய்த் துலங்கும்!

இன்னும் எத்தனையோ பகுதிகள் —
— அத்தனையும் கற்கண்டு; தேன் கூடு; தெள்ளமுது!

அமுது குடித்திட; தேன் பருகிட; கற்கண்டு சுவைத்திட

ஆகஸ்ட் முதல் நாள் தயாராகுங்கள்!

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மலர் பெற்றிட இன்றே உங்கள் விற்பனையாளரிடம் பிரதிகளுக்கு சொல்லி வையுங்கள்!

● முரசொலி விற்பனையாளர்கள் 15-ம் தேதிக்குள் தேவையான முன்பணம் அனுப்பி வைக்காவிட்டால் 'முத்தாரம்' விற்பனை உரிமை மற்றவர்களுக்கு மாற்றப்படும்!

எருக்கட்டாஞ்சேரி

19—7—56 வியாழன் மாலை நடைபெறும் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், சி. ஜம்பு ஆகியோர் பேசுவர்.

மதுரை

15-7-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு திலகர் சதுக்கத்தில் நடைபெறும் மும்முனைப் போராட்ட நினைவு நாளில், தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், கே.எஸ். சந்தானம், வசனப்பித்தன் மற்றும் பலர் பேசுவர்.

நிரவி

18—7—56 புதன் மாலை நடைபெறும் தி. மு. கழக பொதுக் கூட்டத்தில் தோழர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் பேசுவார்.

திருக்களாச்சேரி

18—7—56 புதன் மாலை தோழர் சி. ஜம்பு அவர்களின் தலைமையில், பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

கல்லக்குடியில் மும்முனைப் போராட்ட நாள்!

16—7—56 திங்களன்று, தோழர் அ. தம்புசாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் மு. கருணாநிதி, அம்பில் தருமலிங்கம், எம். எஸ். மணி, செங்குட்டுவன் – ஆகியோர் பேசுவர்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு, சென்னை-6.